பக்கங்கள் – 16+8

விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 207

ஞாயிற்றுக்கிழமை
22 ஜூன் 2025

ஆனி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## இஸ்ரேலுக்கு பணியாளர்கள் அனுப்பப்படார்

கொழும்பு, ஜூன் 22
இஸ்ரேலில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை கட்டுப்படுத்தப்படும் வரை, அங்கு பணியாளர்களை 14

## செம்மணி மனிதப் புதைகுழியை பார்வையிடுவார் வோல்கர் ட்ரக்?

யாழ்ப்பாணம், ஜூன் 22

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக், யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிட வாய்ப்புகள் உள்ளதாகத் தெரியவருகின்றது.** 14



போக்குவரத்தை மேம்படுத்தும் வகையில்

## யாழ். நகர வீதிகளில் கடும் கட்டுப்பாடுகள்!

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் மேம்பட்ட போக்குவரத்தை உருவாக்கும் வகையில் யாழ். மாநகரசபையால் பல முக்கியமான மாற்றங்கள் செய்யப்பட்டு, அவை வர்த்தமானி அறிவித்த 14

## உதயபுரம் வாள்வெட்டு; சந்தேகநபர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ்ப்பாணம் உதயபுரம் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 14

## 'மின்தூக்கியில்' விபத்து இளைஞர் பரிதாபச்சாவு!

### யாழ். நகரப் பகுதியிலுள்ள விடுதியொன்றில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ்ப்பாணம் நகரப் பகுதியிலுள்ள விடுதியொன்றில் மின்தூக்கியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் 14

## நயினாதீவு நாகபூஷணி ஆலயத்தில் ராஜநாகம்!

யாழ்., ஜூன் 22
வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நெருங்கி வரும் நிலையில், நேற்றுச் சனிக் 14



## ஐஸ் போதைப்பொருளுடன் ஆணும் பெண்ணும் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ்ப்பாணம் - நாவாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், 4 கிராம் 40 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஆணொருவரும், பெண்ணொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரி 14

## வலிகாமம் வடக்கை உடன் விடுவிக்குக!

### மயிலிட்டியில் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 22
வலிகாமம் வடக்கிலுள்ள 2 ஆயிரத்து 400 ஏக்கர் காணிகளை விடுவிக்கக்கோரி, காணிகளின் உரிமையாளர்களாலும் 14

மணலுடன் இணைந்த நிலையில்

## யாழ். மாவட்டத்தில் இதுவரை 1,000 மூடை பிளாஸ்ரிக் துகள்



யாழ்ப்பாணம், ஜூன் 22
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இதுவரை மணலுடன் இணைந்தநிலையில் ஆயிரம் மூடைகள் பிளாஸ்ரிக் துகள்கள் மீட்கப்பட்டுள்ளன என்று வடக்கு, கிழக்கு 14

## ஆவணங்கள் எதுவுமின்றி 30 கைதிகள் விடுதலை!

கொழும்பு, ஜூன் 22
இலங்கைச் சிறைச்சாலைகளில் இருந்து கடந்த காலங்களில், ஆவணங்கள் எதுவும் இல்லாமல் 30 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று குற்றப் புலனாய்வுத்துறையின் 14

முச்சந்தி முரளி



'ஆவணமில்லாத 30 பேரை வெளியில விட்டவை ஆவணமிருந்தும் அரசியல் கைதியளை இன்னும் ஏன் அடைச்சு வைச்சிருக்கினமாம்?'

## ஜூலை முதலாம்திகதி முதல் குளிரூட்டப்பட்ட ரயில் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 22
ஜூலை மாதம் முதலாம் திகதிமுதல் யாழ்ப்பாணம் - கல்கிசை இடையே குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயில்சேவை தினமும் இடம்பெறும் என்று யாழ்ப்பாணம் பிரதான ரயில் நிலைய அதிபர் ரி.பிரதீபன் உதயனுக்குத் தெரிவித்தார். 14

## பாரவூர்தியோடு கோரவிபத்து குடும்பத்தலைவர் துயரச்சாவு

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஜூன் 22
கிளிநொச்சி 155ஆம் கட்டைப்பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற விபத்தில் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிக்கொண்டு பயணித்த பாரவூர்தியும், மோட்டார்சைக்கிளொன்றும் மோதியதிலேயே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. 14

சஞ்சீவி

மக்கள் [illegible] நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 21.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4109 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 03 06 46 61 |
| விசேட எழுத்து | U |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 21.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1176 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 19 25 30 38 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 21.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0135 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 5 9 7 0 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 21.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2215 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 17 |
| வெற்றி இலக்கங்கள் | 11 36 53 59 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 21.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5867 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 4 1 4 8 0 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 21.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1897 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 03 12 19 20 |
| விசேட எழுத்து | V |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 21.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0442 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 4 8 0 6 |

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| வெற்றி வாரம் | 0575 |
| திகதி | 21.06.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 2 4 7 4 1 0 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 21.06.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2841 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 24 27 32 73 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 21.06.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கம் | 08 34 48 79 |
| வெற்றி வாரம் | 5002 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 21.06.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0709 |
| வெற்றி இலக்கம் | 22 26 36 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 21.06.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| தனுசு | ♐ |
| வெற்றி இலக்கம் | 15 37 51 62 |
| சீட்டிழுப்பு வாரம் | 4553 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 21.06.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | R |
| சுப்பர் இலக்கம் | 34 |
| வெற்றி இலக்கம் | 02 37 56 57 |
| வெற்றி வாரம் | 2017 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 21.06.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 19 38 39 65 |
| வெற்றி வாரம் | 2667 |

### பொதுமன்னிப்பு முறைகேட்டில்

# விடுக்கப்பட்ட நபர்களை ஏன் கைதுசெய்யவில்லை?

### எதிர்க்கட்சி கேள்வி

**கொழும்பு, ஜூன் 22**

**ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின்கீழ் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்ட கைதிகளில் ஒருவரும் இன்னும் மீண்டும் கைது செய்யப்படவில்லை.அவர்களில் ஒருவரிடமேனும் வாக்குமூலமாவது பெறவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கும்போது அந்தப் பட்டியலில் இல்லாத பல கைதிகள் சட்டவிரோதமான முறையில் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் நான் நாடாளுமன்றில் பேசினேன். அதன் பின் சிறைச்சாலை அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டனர்.

இதற்கும் ஜனாதிபதிக்கும் தொடர்பில்லை.அவரது பொதுமன்னிப்பைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் அதிகமான கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று அரசு சொல்கிறது.

ஆனால் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்ட கைதிகளில் ஒருவரும் இன்னும் கைதுசெய்யப்படவில்லை. அவர்களில் ஒருவரிடமேனும் வாக்குமூலமாவது பெறவில்லை.

சிறைச்சாலை அதிகாரிகள் குற்ற மிழைத்திருந்தால் அவர்கள் நாட்டின் சட்டத்தின்படி தண்டிக்கப்படுவதை நாங்கள் வரவேற்கிறோம்.

எனினும் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்ட கைதிகள் ஏன் இன்னமும் மீளக் கைதுசெய்யப்படவில்லை? இந்த விடயத்தில் அரசு பலவீனமான நிலையில் உள்ளது - என்றார். (ச-75)



# குறுக்குவழி ஆட்சியில்லை

### அரசதரப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 22

கொழும்பு மாநகரசபையின் ஆட்சியை அரசு கைப்பற்றுவதற்காக சிலருக்கு ஜனாதிபதி பார் பெர்மிட் வழங்கினார் என்ற குற்றச்சாட்டு அரசாங்கம் மீதான சேறுபூசும் செயலே. நாம் எந்த டீலும் எவருடனும் செய்யவில்லை என்று அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாம் யாருக்கும் பார் பெர்மிட் வழங்க மாட்டோம். அது எமது கொள்கை. அந்தக் கொள்கையில் நாம் உறுதியாக இருப்போம்.

கொழும்பு மாநகரசபை அரசின்கீழ் இருந்தால்தான் கொழும்புக்கு உரிய சேவையைச் செய்யமுடியும் என்ற உண்மையை நாம் பரப்புரை செய்தோம்.அதை ஏற்றுக்கொண்டே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எமக்கு ஆதரவு வழங்கி ஆட்சியை எம்மிடம் தந்துள்ளனர். இதைத்தவிர வேறு எந்த டீலும் எவருடனும் செய்யவில்லை- என்றார். (ச-75)

### ரூ.433 கோடி வற்வரி மோசடி

# 5 நிறுவனங்களின் சொத்துகள் அரசால் விரைவில் பறிமுதல்

கொழும்பு, ஜூன் 22

433 கோடி ரூபா வற்வரி மோசடி செய்த 5 நிறுவனங்களின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சொத்துகளைப் பறிமுதல் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அவர்கள் செலுத்த வேண்டிய வரிக்குப் பதிலாகவே இந்தச் சொத்துகள் பறிமுதல் செய்யப்படவுள்ளன.

இதற்காக அந்த நிறுவனங்களின் பணிப்பாளர்களின் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன என்று உள்நாட்டு வருமான வரித் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வாகனங்கள், இயந்திரங்கள், நிறுவனத்தின் பங்குகள் மற்றும் நிலையான வைப்புகள் போன்றவை இதன்போது கைப்பற்றப்படவுள்ளன.

இந்த நிறுவனத்துக்குள் அர்ஜுன ஆலோசியஸின் நிறுவனமும் அடங்குகிறது. இந்த நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சிலர் இந்த வரியைச் செலுத்தாத குற்றத்துக்காக சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றனர்.சிலர் சிறையில் இருந்து வெளியே வந்துள்ளனர். இவர்கள் வரியை முழுமையாக செலுத்தாத காரணத்தால் அவர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (ச-75)

# தாயும் மகளும் வெட்டிக்கொலை



அநுராதபுரம், ஜூன் 22

வீட்டில் தனியாக வசித்து வந்த தாயும், மகளும் கூரிய ஆயுதங்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொடூர சம்பவம் அநுராதபுரம், கலன்பிந்துனுவெவைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. கொலைக்குப் பயன்படுத்திய கூரிய ஆயுதங்களையும் வீட்டில் இருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ச-இ)

# இலங்கைப் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்குங்கள்



கொழும்பு, ஜூன் 22

அரச சேவைக்கு பட்டதாரிகளைச் சேர்க்கும்போது இலங்கைப் பல்கலைக்கழகங்களில் பட்டம்பெற்ற பட்டதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டங்களுடன் ஒப்பிடுகையில் தனியார் பல்கலைக்கழகங்களின் பட்டங்கள் தரம் குறைந்தவையாகும். அண்மையில் வழங்கப்பட்ட ஆசிரிய நியமனங்களின்போது ஆசிரிய சேவைக்குள் உள்வாங்கப்பட தனியார் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் ஆசிரியர்கள் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் -என்றார். (ச-41-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைக்காலில் கழிவகற்றல் உடன் நிறுத்தப்படவேண்டும்

## யாழ். நீதிமன்று அதிரடி உத்தரவு


**யாழ்ப்பாணம், ஜீன் 22**

**காரைக்கால் சிவன் கோவிலுக்கு அருகாமையில் நல்லூர்ப் பிரதேசசபையால் திண்மக்கழிவுகள் கொட்டப்படக்கூடாது எனவும் அங்கிருக்கும் குப்பைகளை பிறிதொரு இடத்துக்கு அகற்றுமாறும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.**

சமூக செயற்பாட்டாளர்களான லோ.கோகிலன் த.சித்தார்த்தன் பி.வத்சாங்கன் சி.சிவசங்கர் வ.நவநீதன் ஆகியோரால் சட்டத்தரணி நவநீதன் ஊடாக கடந்த 9ஆம் திகதி இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தக் குப்பை சேமிக்கும் இடத்தில் மருத்துவ, இலத்திரனியல், இரசாயன பொலித்தீன் பிளாஸ்ரிக் கழிவுகள் தரம்பிரிக்காமல் பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக கொட்டப்பட்டு சமூக சீர்கேட்டை உருவாக்கியமையால் அப்பகுதி மக்கள் சுத்தமான காற்றை சுவாசிக்கமுடியாதுள்ளனர். எனவே அதற்கு தடைவிதிக்கப்படவேண்டும் என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நீதிபதி லெனின் குமாரால் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்படி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ச-125)



# சுகாதாரச் சீர்கேடுகள் தண்டம் ரூ.40,000

முல்லைத்தீவு, ஜூன் 22

புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட உடையார்கட்டு, வள்ளிபுனம் பகுதியில் காலாவதியான பொருள்களை விற்பனை செய்த பலசரக்குக் கடையொன்றுக்கும் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகமொன்றுக்கு தலா 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

உடையார்கட்டுப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரதாஸ் மற்றும் வள்ளிபுனம் பொது சுகாதார பரிசோதகர் றொய்ஸ்ரன் ஜோய் ஆகியோர் அண்மையில் திடீர்ச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோதே குறித்த நிலையங்கள் சிக்கிக்கொண்டன.

இரு வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் எதிராக நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே கடை உரிமையாளர்கள் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட நிலையில் 40 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ச-26)

# 70 வருடங்களின் பின்னர் கல்மடுநகர் வீதிக்கு புத்துயிர்

கிளிநொச்சி, ஜூன் 22

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் ஏழாம் யூனிட் பகுதியில் அமைந்துள்ள வீதி தார் வீதியாக சீரமைப்புச் செய்யப்படவுள்ளது.

70 வருடங்களுக்கு மேலாக மக்கள் பயன்படுத்தமுடியாத நிலையில் குறித்த வீதி காணப்பட்ட நிலையில் தேசிய மக்கள் சக்தியின் அரசால் 35 மில்லியன் ரூபா செலவில் இந்த வீதி புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

வீதிப்புனரமைப்புக்கான ஆரம்ப நிகழ்வு சம்பிரதாயபூர்வமாக நேற்று சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர்கள் மற்றும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர், கண்டாவளைப்பிரதேச செயலாளர், கிராம சேவையாளர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-41-113-27)



# 'மறுமலர்ச்சிக்கான பாதைத் திட்டம்' பருத்தித்துறையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

தேசிய மக்கள் சக்தியின் மறுமலர்ச்சித் திட்டங்களின் ஒன்றான 'மறுமலர்ச்சி கான பாதை' எனும் கிராமப்புற வீதிகள் அபிவிருத்தித் திட்டத்தின் முதற்கட்டம் நேற்று சனிக்கிழமை யாழ். வடமராட்சி பருத்தித்துறையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் 1000 கிராமப்புற வீதிகள் மேம்படுத்தப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக 55 கிராமிய சாலைகள் தற்போது அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

இதற்காக 14 பில்லியன் ரூபாவும், மேலும் 5 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டு மொத்தமாக 19 பில்லியன் ரூபா இந்தத் திட்டத்தில் பயன்படுத்தப்படவுள்ளது.

பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத்தெரு குறித்த திட்டத்தின் ஒரு பகுதியாக தெரிவு செய்யப்பட்டு அதன் அபிவிருத்திப் பணிகள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிகழ்வில் போக்குவரத்து அமைச்சின் மேலதிக செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர், துறைசார் அதிகாரிகள், தேசியமக்கள் சக்தியின் அமைப்பாளர்கள், இணைப்பாளர்கள், பருத்தித்துறை நகரசபையின் தவிசாளர், செயலாளர், உறுப்பினர்கள், பருத்தித்துறைப் பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-125,66)

# உடைமையில் ஹெரோய்ன்; யாழில் 3 இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 22

சுன்னாகம் பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைவாக முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபர்கள் மூவரிடமிருந்தும் தலா 110 மில்லிகிராம், 60 மில்லிகிராம், 40 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டன.

30 வயதான இருவரும் 32 வயதான ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

# வழுக்கையாற்றிலிருந்து நீர் யாழ்.பல்கலையால் ஆராய்ச்சிப்பயணம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

யாழ்ப்பாணத்தில் வழுக்கையாற்றைப் புனரமைப்புச் செய்து நிலத்தடி நீர்த் தேவை மற்றும் விவசாய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான ஆய்வுப் பயணமொன்றை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் நேற்று ஆரம்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வறுத்தலைவிளான் பகுதியில் ஆரம்பிக்கும் இந்த வழுக்கையாற்று ஆராய்ச்சிப் பயணம் அராலியில் முடிவடையவுள்ளது. இதன்போது விவசாயிகள், அரச திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள், பொதுமக்கள், பொறியியலாளர்கள், விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் மருத்துவபீட மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-26-66)

# சுழிபுரம் பறாளாய் விநாயகருக்கு நேற்றுக் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

வரலாற்றுச் சிறப்புமிக்க சுழிபுரம் பறாளாய் விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

உற்சவம் தொடர்ச்சியாக 12 நாள்கள் இடம்பெற்று எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை இரதோற்சவமும் மறுநாள் புதன்கிழமை வரலாற்றுப் பிரசித்திபெற்ற சுழிபுரம் புனித திருவடிநிலை தீர்த்தக்கரையில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். இதேவேளை தமிழ் மன்னர்கள் காலத்தில் போர்த்துக்கேயரால் குறித்த ஆலயம் இடிக்கமுற்பட்டபோது காகமொன்று வந்து அவரின் கண்ணைக் கொத்தி ஆலயத்தை இடிக்கவிடாது தடுத்தது. அதனால் குறித்த ஆலயம் கண்ணைக் கொத்திக் காக்கைப்பிள்ளையார் ஆலயம் என்றும் அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## பொன்னுத்துரை சிவாகரன்

மட்டுவில் வடக்கை பிறப்பிடமாகவும் இலந்தைகட்டி வைரவர் கோவிலடி, ஏழாலை வடக்கை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிவாகரன் அவர்கள் (20.06.2025) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னுத்துரை - விஜயலட்சுமி தம்பதியரின் மகனும், பாலநாதன் - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும், ஜெயகௌரியின் (யா/ இளவாலை மெய்கண்டான் மகா வித்திய ஆசிரியை) அன்புக் கணவரும், அநகனின் அன்புத் தந்தையும், சிவகௌரி (Belgium), பாஸ்காரன், ஜெயகௌரி, விசாகரன் ஆகியோரது சகோதரனும், காவஞ்சென்ற ஜெயசீலன் மற்றும் ஜெயவதனி, ஜெயகுமார், ஜெயமோகன் ஆகியோரது மைத்துனரும், சச்சிதானந்தன் (Belgium), அகிலநாதன், சர்மிளா, ஆகியோரது மைத்துனரும் ஆவார்.

மேலும் டிலானி, கேசிகா (Belgium) ஆகியோரது மாமனாரும், நேருஜன், அக்ஷயா, ஆருஷ் ஆகியோரது பெரிய தந்தையாரும் ஆவார். ஔடதன் கீர்த்திகாவின் (Canada) சிறிய தந்தையும் ஆவார். மீனாட்சி, பவித்திரன், சபிசன் (France) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் (23.06.2025) திங்கட்கிழமை மாலை 03.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்தில் தகனக்கிரியைகள் இடம் பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தோற்றம் 09.03.1972 — மறைவு 20.06.2025

இலந்தைகட்டி வைரவர்,
கோயிலடி, ஏழாலை வடக்கு,
ஏழாலை.

தகவல் :
சி. ஜெயகௌரி
(மனைவி)
077 072 9318

(CS/3455) D*

# மரண அறிவித்தல்



## தவில் இளவரசு
## இராமநாதன் தர்சீலன்

வட்டூர் தவில் வித்துவான் இராமநாதன் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், கஜிதா அவர்களின் அன்புக் கணவரும், N.R. தர்ஷன், N.R. தர்ஷனன், N.R. தர்ஷாரகவன், N.R. சிவசாகித்தியன், N.R. குகவர்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 11.04.1988 — மறைவு 21.06.2025

அடைக்கலம் தோட்டக்
கந்தசாமி கோவிலடி
மாவடி,
வட்டுக்கோட்டை.

(CS/2785) J-1

தகவல்:
குடும்பத்தினர்
077 632 3041
077 491 4179

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# குடியிருப்பு ஆதன வரியை 8 வீதமாக குறைப்போம்

## வவுனியா மாநகர முதல்வர் தெரிவிப்பு



வவுனியா, ஜூன் 22

வவுனியா மாநகரசபைக்குட்பட்ட குடியிருப்புகளுக்கான ஆதன வரியை 8 சதவீதமாகக் குறைப்பதற்கு எதிர்பார்ப்பதுடன், குடியிருப்பை தவிர்ந்த ஏனைய இடங்களுக்கு 10 சதவீதமாக அறவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக வவுனியா மாநகர முதல்வர் சு.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாநகரசபையானது குடியிருப்புகளுக்கான ஆதனவரியாக 8சதவீதத்தையும் ஏனைய இடங்களுக்கு 10 சதவீதத்தையும் அறவிடுகின்றது, எனவே முதற்கட்ட மாக அதே தொகையை நாங்களும் அறவிடுவதற்குத் தீர்மானித்துள்ளோம். எமது கன்னி அமர்வில் இது தொடர்பான விடயம் இறுதி செய்யப்படும் - என்றார்.

(ச-110)






# விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டி மன்னார் மாணவி சாதனை

மன்னார், ஜூன் 22

கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவி அ. நயோலின் அப்றியானா மாகாணமட்டப் போட்டியில் முதலாம் இடத்தையும், தேசியமட்ட ஒலிம்பியாட்போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

அவருக்கான சான்றிதழ் கல்வி அமைச்சில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கல்வி மற்றும் உயர் கல்விப் பிரதி அமைச்சர் டாக்டர் மதுர செனவிரத்னால் வழங்கிவைக்கப்பட்டது.

இவருடன் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இரு மாணவர்கள் இரண்டு இரண்டாம் நிலைகளைப் பெற்றுக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ச-56)

# மக்கள் முறைப்பாட்டுக்கு வவு.வில் வட்ஸப் செயலி

வவுனியா, ஜூன் 22

வவுனியா மாநகரத்துக்குட்பட்ட மக்கள் தங்களது முறைப்பாடுகளை இலகுவாக வழங்குவதற்காக வட்ஸப் செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள் ளது. இதன்மூலம் தங்களது பிரச்சினைகளை குறுந்தகவல்கள்மூலமாக அனுப்பினால் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று வவுனியா மாநகர சபை முதல்வர் தெரிவித்துள்ளார்.

0713247247 என்ற இலக்கத்தின் மூலம் பொதுமக்கள் 24 மணித்தியாலமும் எம்மைத் தொடர முடியும். ஜூலை முதலாம் திகதி முதல் இந்த நடவடிக்கை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும். மூன்று மொழிகளிலும் குறித்த சேவையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மேடம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்கள்வழியில் செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்படக் கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. தாயிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**இடபம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். குடும்பம் அல்லது வேலை தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக் கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. செலவுகளால் கடன்வாங்கவும் நேரிடும்.

**கடகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிபெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்படும். ஆனாலும், உற்சாகத்துக்குக் குறைவிருக்காது. பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** வரவும் செலவும் அடுத்தடுத்து வந்தாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையின் தேவையை நிறைவேற்றிமகிழும்வாய்ப்பு உண்டாகும். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்றுவருவீர்கள். மாலையில் பள்ளி, கல்லூரிக்கால நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**கன்னி:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமை அவசியம். எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படக்கூடும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** சோர்வு நீங்கி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை அரவணைத்துச் செல்வது அவசியம். முடிந்தவரை அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சிசெய்யவும். உறவினர்கள் வருகையால்திடீர் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள்.

**விருச்சிகம்:** வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்துடன் உறவினர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

**தனுசு:** உற்சாகமான நாளாக அமையும். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். சகோதரர்கள் உங்களுடைய யோசனையை ஏற்றுக்கொள்வார்கள். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**மகரம்:** பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். சிலருக்கு தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தாயின் விருப்பத்தை பூர்த்திசெய்வீர்கள்.

**மீனம்** சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். இளையசகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.



இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தால் நடத்தப்பட்ட தேசியமட்ட கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவன் ந. டன்ஸ்சன் 20 வயது ஆண்கள் பிரிவில் கோலூன்றிப்பாய்தலில் 4.30 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்தைத் தனதாக்கியுள்ளார்.

குறித்த மாணவனும் பயிற்றுவிப்பாளர் சி. சுபாஷ்கரனும் பாடசாலை சமூகத்தால் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். (ச)

# மாபெரும் இலக்கிய விழா

யாழ்ப்பாணம், ஜூன் 22

இலங்கையின் பாவலர் பயிலரங்க மாணவர்கள் குழுமத்தின் ஒழுங்கமைப்பில் பிரான்ஸ் கம்பன் கழகத்தின் தலைவர் பாட்டரசர் கி.பாரதிதாசன் ஐயாவின் பங்கேற்புடன் மாபெரும் இலக்கிய விழா நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். நல்லூர் அருள்மிகு துர்க்கா தேவி மணிமண்டபத்தில் காலை 10 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை இடம் பெறவுள்ளது. நிகழ்வில் கவியரங்கம், பட்டிமன்றம், பாவலர் பயிலரங்கு, மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா, மற்றும் தமிழ்ப்பணி செய்த ஆளுமைகளுக்கு பட்டமும் கௌரவிப்பு, இந்தியாவிலிருந்து வருகைதரும் ஆளுமைகளின் இலக்கியச் சொற்பொழிவு ஆகியன இடம்பெறவுள்ளன. நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-41)



# வீதி நாடகம்



யாழ்ப்பாணம், ஜீன் 22

காவேரி கலாமன்றத்தின் ஏற்பாட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்பும், அனர்த்தத்தில் இருந்து விடுபடுதலும் எனும் கருப்பொருளில் "எங்கே அந்த வழி" எனும் வீதிநாடகம் முத்தமிழ் சனசமூக நிலையத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா, காவேரி கலாமன்றத்தினர், முத்தமிழ் சனசமூக நிலையத்தினர், சிறார்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-41-27)

# நிறுவுநர் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜூன் 22

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் இடம் பெறவுள்ளன. கல்லூரி அதிபர் இ.புஸ்பரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஓய்வுநிலை செயலாளர் திருமதி மலர்மதி கங்காதரன், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை இராணுவ ஓய்வுநிலை அதிகாரி வி.ரி.மகாலிங்கம், கனடா பொறியியலாளர் க.ஜெயேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். நிகழ்வில் நினைவுப் பேருரையை கனடா பொறியியலாளர் தி.தயந்தன் ஆற்றவுள்ளார். (ச-41)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 22

சரசாலை இலந்தைத்திடல் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணியளவில் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை வேட்டைத் திருவிழாவும் 10ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் 12ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச-41-159)



கிளிநொச்சி சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் சர்வதேச யோகா தினம் சின்யா மிஷன் சுவாமிகள் சிவேந்திர சைத்தன்யா தலைமையில் நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (ச-41-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Board of Directors of Jaffna College Vaddukodai

## VACANCY

### Post of Principal of Jaffna College

Applications are invited from suitable candidates for the above post. The applicants must meet the following requirements:

- A degree from a university recognized by the University Grants Commission of Sri Lanka with a postgraduate qualification. Applicants with high academic achievements in related fields will have an added advantage.
- A minimum of ten years of secondary school teaching experience.
- Be a communicant member of a church belonging to the National Christian Council of Sri Lanka.
- Excellent leadership qualities and calibre to command the respect of the community.
- Maintaining open communication with students, staff, parents and alumni and liaising with national education authorities.

Salary is negotiable. Residential facilities are provided within the school premises.

All applications must be submitted through **both registered post and email.** This dual submission ensures proper documentation and timely receipt. Candidates are advised to send their complete application along with all required enclosures **on or before the 22nd of July 2025** to the following:

Postal address: **Convener,**
**Selection Committee**
**Jaffna College**
**Vaddukodai.**

**email address: seco.bdjc2025@gmail.com**

Only shortlisted candidates will be called for the interview.

**Convener,**
**Selection Committee of the Post of Principal**
**Board of Directors of Jaffna College**
**Vaddukodai.**

(CS/58810) J-1




**SMR CONSOLIDATED**
Manufacturers, Refiners & Exporters of Edible Oils & Fats.

# சிறந்த வணிக வாய்ப்பு

## விநியோக முகவர்கள் தேவை

SMR Consolidated இந்த நிறுவனம் இலங்கையில் சமையல் எண்ணெய்களின் முன்னணி உற்பத்தியாளராக உள்ளது. தற்போது உலகம் முழுவதும் 57 நாடுகளுக்கு அதன் தயாரிப்புகளை ஏற்றுமதி செய்கிறது மற்றும் இலங்கையில் ஒரு உற்பத்தி மற்றும் விநியோக நிறுவனமாக வெற்றிகரமாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.

எங்கள் நிறுவனத்தின் தேங்காய் எண்ணெய் மற்றும் பேக்கரி மாஜரின் தயாரிப்புகளுக்கு பின்வரும் பகுதிகளில் விநியோக முகவர்களை நியமிக்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | வவுனியா

மேற்கண்ட மாவட்டங்களுக்கான விநியோக பிரதிநிதி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பினால், நீங்கள் ரூ. 05 மில்லியன் முதலீடு செய்யக்கூடியவராகவும், வணிகத் துறையில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவைக் கொண்டவராகவும், வெற்றிகரமான விநியோக வலையமைப்பைக் கொண்டவராகவும், பொருத்தமான உள்கட்டமைப்பு வசதிகளை வழங்கக்கூடியவராகவும் இருக்க வேண்டும்.

மேற்கண்ட தகுதிகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இந்த விளம்பரம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 21 நாட்களுக்குள் மின்னஞ்சல், தபால் அல்லது நேரில் வந்து சேரும் வகையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
**varnan@smrconsolidated.com**

மேலும் தகவலுக்கு, கீழே உள்ள தொலைபேசி எண்ணை அழைக்கவும். 0770118487

SMR Consolidated, No 40, New Kelani Bridge Road, Orugodawatte.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## தங்கம்மா கணபதிப்பிள்ளை

**தோற்றம்** 12.10.1932 **மறைவு** 20.06.2025

மீசாலை வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தங்கம்மா கணபதிப்பிள்ளை அவர்கள் தனது 93வது வயதில் கடந்த (20.06.2025) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்லாட்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும், புவனேஸ்வரி (வட்டக்கச்சி), நிர்மலநாதன் (திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், அருந்ததி ஆகியோரின் மைத்துனியும், சொர்ணபூபதி, காலஞ்சென்றவர்களான சொர்ணமலர், கமலாம்பிகை மற்றும் சொர்ணரஞ்சினி (ஜேர்மனி), மகாதேவன் (ஆதவன் ஸ்ரூடியோ, புத்தூர்ச்சந்தி), சிவரகுநாதன் (சுவிஸ்), சர்வாஜினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி இணைப்பு தென்மராட்சி பிரதேச செயலகம்), இன்பராஜ் (ஜெகன்-வியாபாரம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கெங்காதரம்பிள்ளை (கங்கா போட்டோ கோண்டாவில்) மற்றும் வன்னியசிங்கம் (பரந்தன்), பரமநாதன் (ஜேர்மனி), விநாயகலிங்கம், அஜந்தா (சுவிஸ்), அமராபதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பவாநந்தன், வித்தியாநந்தன், மற்றும் சதாநந்தன் மற்றும் புவனலோஜினி (பிரதேச வைத்தியசாலை வட்டக்கச்சி), காலஞ்சென்ற சுதாநந்தன், மற்றும் யோகாநந்தன் (லண்டன்) ஆகியோரின் பெரியம்மாவும், சகுந்தன் (நிர்வாக உத்தியோகத்தர் உள்ளூராட்சி திணைக்களம், கிழக்கு மாகாணம்), நிரஞ்சனா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரகாஷ், வினோஜா (கங்கா போட்டோ அன் வீடியோ), நிலானி-பிரேமபாலன் (பிரான்ஸ்), தர்சினி (மாவட்ட வைத்தியசாலை கிளிநொச்சி), ஜெனாநந்தன் (வலயகல்வி பணிமனை கிளிநொச்சி வடக்கு வலயம்), வரோதயன் (காணி அணையாளர் திணைக்களம், வடமாகாணம்), நிந்துஜா - தினேஷ் (ஜேர்மனி), நிதுலா - விக்நாத் (ஜேர்மனி), யவாகர் (ஜேர்மனி), ஆதீசன் (சுவிஸ்), ஆதவன் (சுவிஸ்), அருணன் (சுவிஸ்), இந்துஜா - நிரூஜன் (SLIIT Nothern Uni திருநெல்வேலி), மதுஜன் (Driver), டெனுஜா ஆகியோரின் பேர்த்தியும், பிரவீன், நிருசன் (கோண்டாவில்), பிரசாத், கயுனிகா (பரந்தன்) ஆகியோரின் பூட்டியும், அருள்மிகு சீமாவளவு ஞானவைரவர் ஆலய தர்மக்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2025) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
077 462 8009, 077 716 3236

மீசாலை வடக்கு,
மீசாலை.

(CR/45323) J-1

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 21 . 02 . 1952 **மறைவு** 19 . 06 . 2025



## இரத்தினம் துரைநாயகம்

(போதகர் ஆபிரகாம் - இயேசு ஜீவிக்கிறார் - சர்வதேச சுவிஷேச பணிமனை)

ஓட்டுமடத்தை பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் துரைநாயகம் அவர்கள் கடந்த (19.06.2025) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம்-மாணிக்கம் தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-சின்னப்பிள்ளை தம்பதியின் அன்பு மருமகனும் சரஸ்வதி (சாராள்) அவர்களின் அன்புக் கணவரும், தர்ஷிகா (UN-IOM), லக்ஷிகா (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கஜன் (HM Brothers) அவர்களின் பாசமிகு மாமனாரும், கியாரா இவாஞ்சலினின் பாசமிகு பேரனும், சரஸ்வதி, தனநாயகம், இராஜநாயகம், இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22.06.2025) பிற்பகல் 02.00 மணியளவில் இல. 102/39 வெள்ளுவடி வீதி, சுதுமலை வடக்கு, மானிப்பாய் எனும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று சரீரம் தாவடி கிறிஸ்தவ சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

102/39,
வெள்ளுவடி வீதி,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 563 2926**

# மரண அறிவித்தல்

**தோற்றம்** 16 . 03 . 1943 **மறைவு** 19 . 06 . 2025



## கந்தையா கனகசபை

(உத்தரவு பெற்ற பட்டய நில அளவையாளர், நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர், சமாதான நீதிவான்)

மீசாலை, வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் 125 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா கனகசபை அவர்கள் கடந்த 19.06.2025 வியாழக்கிழமை சந்நிதியான் திருவடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மீனாட்சி தம்பதிகளின் பாசமிகு மகனும், சிதம்பரப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், விமலாதேவியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசையா, சோமசுந்தரம், வேலுப்பிள்ளை, நாகராசா ஆகியோரதும் மற்றும் கந்தசாமியின் அன்புச் சகோதரனும், அன்னப்பிள்ளை, காலஞ்சென்ற நாகேஸ்வரி, கேமலதா, சிவயோகராணி, காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், முருகவேள், சிறிஸ்கந்தவேள், காலஞ்சென்ற திருமகள், இளங்கோவேள், எழில்வேள் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்யா, பிரியா, வைஷ்ணவி, ரஞ்ஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிபிரசாத், பைரவி, குந்தவி, பார்கவி, யுவருதன் ஆகியோரது பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவிலல் பிறவுண் வீதியில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனகிரியைக்காக மீசாலை வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல : 125 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

நல்லொழுக்கம் என்பது
உனக்கு நீயே அளித்துக்கொள்ளும்
நன்மதிப்பாகும்.

– பேர்னாரட்ஷா –

# பலமற்ற அத்திபாரமும் நிலையற்ற கட்டடமும்!

போதைப்பாவனைக்கு அடிமையானவர்களுக்கு நல்தொரு வாழ்க்கையை மீண்டும் அமைத்துக் கொடுப்பதற்காக, ஒவ்வொரு மாவட்டங்கள்தோறும் புனர்வாழ்வு மையங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கின்றார் நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார. நாட்டில் போதைப்பொருள் பாவனை பெரும் புற்றுநோய் போன்று வியாபித்துவருகின்றது. ஆனால், போதைக்கு எதிரான 'காத்திரமான மருந்தாக' அமையும் புனர்வாழ்வு மையங்களுக்குப் பெரும் பற்றாக்குறையே நிலவுகின்றது. தற்போதுவரை கந்தகாடு மற்றும் சேனபுர ஆகிய இடங்களிலேயே புனர்வாழ்வு மையங்கள் உள்ளன. எனவே, மாவட்டங்கள்தோறும் புனர்வாழ்வுமையங்கள் என்ற அரசாங்கத்தின் சிந்தனை பாராட்டப்படவேண்டியது.

போதைப்பொருள் பாவனைக்கு உட்பட்ட நபர்களை, விசேட கண்காணிப்பின்கீழ் வைத்திருக்க வேண்டும். அவர்களுக்கான புனர்வாழ்வு, சம்பிரதாய அடிப்படையில் மேற்கொள்ளப்படாமல், தனிப்பட்ட கவனிப்புகளின்மூலம் மிகவும் ஆழமாகக் கட்டமைக்கப்படவேண்டும். இதற்கு மாவட்டங்கள்தோறும் புனர்வாழ்வு மையங்கள் அமைக்கப்பட்டு, போதைப் பாவனைக்கு ஆட்பட்டவர்களை அந்தப் புனர்வாழ்வு பரவலாக்கம் செய்யவேண்டும். ஒரு வகுப்பறையில் மெல்லக் கற்கும் மாணவன்மீது ஆசிரியருக்கு உண்டாகும் அக்கறை போன்று தனித்தனியான கவனிப்பின் கீழ்தான் இந்த விடயம் அணுகப்படவேண்டும். அதுவே ஏற்கக்கூடிய நல்ல தீர்வாகவும் அமையும்.

ஆனால், இந்த எண்ணப்பாடு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்குச் சொந்தமானதல்ல. இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில்கூட பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும், அதற்கு இதுவரை காத்திரமான தீர்வொன்றும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறான பின்னணியில் தான், மீண்டும் 'மாவட்டம்தோறும் மறுவாழ்வு மையங்கள்' தொடர்பான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இம்முறையாவது இந்தத் திட்டம் நிறைவேறுமா என்பது சந்தேகம்தான். நிறைவேறினால், அது வரவேற்கப்படவேண்டியதே.

புனர்வாழ்வு மையங்களை அமைப்பதற்கான மற்றொரு காரணமாக, சிறைநெருக்கடியை நீதியமைச்சர் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார். சிறைகளில் உள்ள போதைப்பொருள் பாவனையாளர்களை புனர்வாழ்வு மையங்களுக்கு மாற்றினால், சிறைகளில் நெருக்கடி குறையும் என்பது அவரின் வாதம். இது அர்த்தப்பிழையானது மட்டுமல்ல அபத்தமானதும்கூட. சிறைகளில் நெருக்கடியைக் குறைக்கவேண்டுமாயின், 'வீட்டுச்சிறை' போன்ற ஏராளம் பரிசீலனைகள் உள்ளன. அதைவிடுத்து, சிறைத்தண்டனைக்குத் தகுதியானவர்களை புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்புவது, 'இருப்பதையும் கெடுக்கும்' செயலாகவே அமையும். எனவே, மிகவும் நுணுக்கமான பொதுப்பொறிமுறையின்கீழ்தான் இந்த விடயம் அணுகப்பட வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேல், புனர்வாழ்வு வழங்கப்பட்ட ஒருவர், மீண்டும் போதைப்பொருளை அணுகாதிருக்கும் சூழல் உறுதிப்படுத்தப்படவேண்டியது அவசியம். சமுகத்தில் போதைப்பொருள்கள் விரவியிருக்கின்றபோது, புனர்வாழ்வை ஒருவருக்கு வழங்கிவிட்டு, அதே போதைக்கட்டமைப்புக்குள் அவரை மீண்டும் வாழவிடுதல் தகாது. எனவே, முதலில் சமுகக் கட்டமைப்பிலிருந்து போதைப்பொருளைத் துடைத்தெறிய அரசாங்கம் முன்வரவேண்டும். பலமற்ற அத்திபாரத்தில் கட்டப்படும் எந்தக் கட்டடமும் நிலையற்றதே!




# வாகன அலங்காரங்கள் ஜூலை 1 முதல் அகற்றம்

## பொலிஸார் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 22

'தூய இலங்கை' திட்டத்தின்கீழ் வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள அத்தியாவசியமற்ற உதிரிப்பாகங்களை அகற்றும் நடவடிக்கை ஜூலை முதலாம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று இலங்கைப் பொலிஸ் அறிவித்துள்ளது. பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திக ஹபுகொட இதுதொடர்பில் தெரிவிக்கையில், இந்த மாற்றங்களில் அதிக ஒளிரும் விளக்குகள், ஒலிபெருக்கிகள் மற்றும் இரும்புக்கம்பிகள் போன்ற அங்கீகரிக்கப்படாத சாதனங்கள் அடங்கும். இவ்வாறான வாகன மாற்றங்கள் பெரும்பாலும் விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்துவதாக அவதானிக்கப்பட்டுள்ளது- என்றார். (ச-இ)



# தரமற்ற சீனி; அங்காடிக்குத் தண்டம்

கொழும்பு, ஜீன் 22

நீர்கொழும்பில் பழுப்பு நிற சீனி என்ற பெயரில் நிற மூட்டப்பட்ட சீனியை விற்பனைசெய்த பல்பொருள் அங்காடிக்கு நான்கு இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

பாவனையாளர் அதிகார சபைக்குக் கிடைத்த தொடர்ச்சியான முறைப்பாடுகளையடுத்து மாதிரிகளை எடுத்துப் பரிசோதனை செய்தபோது விற்பனைசெய்யப்பட்ட சீனி தரமற்றது என பரிசோதனை முடிவுகள் தெரிவித்திருந்தன. (ச-41-6)

வாகன இறக்குமதி


# ரூ.165 பில்லியன் அரசுக்கு வருவாய்


கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் வாகன இறக்குமதித்தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கத்துக்கு 165 பில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது. இஸ்ரேல் - ஈரான் யுத்தம் காரணமாக வாகன இறக்குமதியில் எதுவிதத் தடங்கலும் ஏற்படவில்லையெனவும் இதுவரை 14 ஆயிரம் வாகனங்கள் இறக்குமதிசெய்யப்பட்டுள்ளன எனவும் சுங்கத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ச-41-6)

# போலி நாணயத்தாள் ஒருவர் கைதானார்!

கொழும்பு, ஜூன் 22

ஹதரலியத்தப் பகுதியில் 5 ஆயிரம் ரூபா போலிநாணயத்தாள்களை வைத்திருந்த ஒருவர் நேற்றுமுன் தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். 32 வயதுடைய சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து 3 போலியான 5 ஆயிரம் ரூபா நாணயத்தாள்களும் 2 போலியான 500 ரூபா நாணயத்தாள்களும் 2 போலியான 100 ரூபா நாணயத்தாள்கள்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இதுகுறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)





# போதைப்பொருள் வர்த்தகம்; சந்தேகநபர் சிக்கினார்!

கொழும்பு, ஜூன் 22

கொழும்பு வடக்கு பிரிவு குற்றப்புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின்படி, மோதர லெல்லமாப் பகுதியில் நடத்தப்பட்ட சோதனையின்போது 7 கிலோகிராம் ஹசீஸ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரின் வீட்டில் நடத்தப்பட்ட சோதனையின்போது, மேலும் 9 கிலோகிராம் ஹசீஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கு விற்கத் திட்டமிடப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட போதைமாத்திரைகள் மற்றும் 750 கிராம் கேரள கஞ்சா என்பனவும் பறிமுதல் செய்யப்பட்டன. இந்தப் போதைப்பொருளின் மொத்த மதிப்பு 175 மில்லியன் ரூபாவுக்கும் மேல் எனப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் தற்போது வெளிநாட்டில் இருக்கும் போதைப்பொருள் கடத்தற்காரரான புளூமெந்தல் ரவியின் ஆதரவாளர் என்றும் தெரியவந்துள்ளது,

சந்தேகநபர் தடுப்பு உத்தரவின் அடிப்படையில் மேலும் விசாரிக்கப்படவுள்ளார். (ச-இ)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு படகுப் பாதை இப்போதைக்கு இல்லை!

நயினாதீவுக்கு இயந்திரப் படகுப் பாதை சேவை எதிர்வரும் ஜூலை மாதம் ஆரம்பமாகாது. அதனை ஆரம்பிப்பதற்கு செப்ரெம்பர்வரை கால அவகாசம் தேவைப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் நயினாதீவு - குறிகாட்டுவான் இடையே புதிய படகுப் பாதை சேவை ஒன்றினை ஆரம்பிக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கைகளை முன்னெடுத்தது. குறித்த சேவை ஜூன் அல்லது ஜூலை மாத முடிவில் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் குறித்த படகுப்பாதை தயாரிக்கும் நிறுவனமானது திருகோணமலை குறிஞ்சாகேணியின் படகுப் பாதை சேவையை விரைவாக வழங்கு வதற்கு நடவடிக்கை முன்னெடுத்து வரும் நிலையில் நயினாதீவுக்கான புதிய படகுப் பாதை சேவையை முன்னெடுக்க செப்ரெம்பர் மாதம் வரை காலஅவகாசம் கோரியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச-125)


## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் அமைந்துள்ள பிரபல நட்சத்திர விடுதிக்கு கீழ்கண்ட பணிகளுக்காக பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்

- சுத்திகரிப்பு பணியாளர்கள்
- பாதுகாப்பு பணியாளர்கள்
- Electrician
- சலவை உதவியாளர்கள்

தொடர்புகளிற்கு:
Phone No - 076 345 3485 / 077 780 3203
E-mail - hrvalampuri@gmail.com

(CS 58641) E

## காணி விற்பனைக்கு

யாழ் சுண்டுக்குளி மோரிஸ் ஒழுங்கையில் புதிதாக பிரிக்கப்பட்ட காணித் துண்டுகள்

- கொழும்புத்துறை சாலைக்கு மிக அருகில்
- சிறந்த சூழல்
- அகலமான சாலை - 15 அடி & 20 அடி
- UDA அங்கீகரிக்கப்பட்டது
- உடனடி கட்டிடம் சாத்தியம்
- 1.4 பரப்பு X 6* துண்டுகள் (1ப 7கு)
- 1.33 பரப்பு X 2* துண்டுகள் (1ப 6கு)
- ஸ்ட்ரீட்லைன் சான்றிதழ்
- உரிமைச் சான்றிதழ்
- கையலிக்கபடாமைக்கான நற்சாட்சி சான்றிதழ்
- மின் இணைப்புக்கான அனுகல்

சில துண்டுகள் ஏற்கனவே விற்கப்பட்டுள்ளன.
தரகர்கள் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:
077 711 5438, 076 156 2983

## பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு ஆண் பராமரிப்பாளர் தேவை.
உணவு, தங்குமிட வசதி இலவசம்.
தகுந்த சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

நிர்வாகி
077 810 6857, 0759742495,
021 226 5551
www.valvaieldershome.com

(CS/58611) J-1

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Typing , Photocopy | : 0720789399 |
| கைவினை கலைஞர் | : 0767781004 |
| Student Visa Representative | : 0772155933 |
| சுத்திகரிப்பாளர் | : 0777803203 |
| Sales & Marketing | : 0743433127 |
| Delivery rider(Jaffna,Vavuniya,Kilinochchi,Trinco) | : 0761413416 |
| Speech & Language Therapist | : 0775571950 |
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | : 0763453485 |
| பகுதி நேர வேலைவாய்ப்பு | : 0755489898 |
| Marketing Manager | : 0775085847 |
| Electrician | : 0763453485 |
| Computer Operator | : 0766273710 |
| பெண் ஊழியர்கள் | : 0775950455 |
| Sales Manager(Basic 90,000) | : 0770079053 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு: dewmasweb.com
வேலையாட்கள் தேவையா: 0769984532
DEWMAS, 51, Amman Road, Nallur

## மணமகன் தேவை

யாழ் இந்து 1999 V அவிட்ட நட்சத்திரம் 4 இல் சூரியன் செவ்வாய் உள்ள Bsc பட்டதாரி மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை

தொடர்பு: 077 353 6866

## வேலை வாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும் சமுத்திரா ரேடர்ஸ் (Hardware) நிறுவனங்களுக்கான வேலை வாய்ப்பு. ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு:
076 151 7481, 077 494 9683

(CS 58644) E

## வீடு விற்பனைக்கு

சுன்னாகம் கதிரமலை வீதி (முருகேசு பண்டிதர் வீதி) K.K.S வீதிக்கு அருகாமையில் 2 3/4 பரப்பு காணியுடன் நல்ல நிலையில் உள்ள 3 Room, 1 Bathroom, வாகனத்தரிப்பிடத்துடன் சுற்று மதில் கட்டிய Gate போடப்பட்ட வீடு தரமான உறுதிப்பத்திரங்களுடன் 3 கோடி. தரகர் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
(விலை சிறிது பேசித் தீர்மானிக்கப்படும்.)

S.P. Karan's: 077 343 4005

## வீடு வாடகைக்குத் தேவை

கல்வியங்காடு, இருபாலை, கைதடி, கச்சேரி, அரியாலை, கொழும்புத்துறை பகுதியில் 2-4 அறைகளுடன் கூடிய தனிவீடு இணைக்கப்பட்ட குளியலறையுடன் தேவை.

தொடர்புகளுக்கு:
077 728 4196

(CS 58645) E


## கண்ணீர் அஞ்சலி



### கந்தையா கனகசபை

(உத்தரவு பெற்ற பட்டய நில அளவையாளர், நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர், சமாதான நீதவான்)

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சி அடைவதுடன் இவரின் இழப்பால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

தோற்றம் 16.03.1943
மறைவு 19.06.2025

செ.மணிவர்னன் குடும்பத்தினர் நல்லூர்

வாணி ரெக்ஸ் உரிமையாளரும் ஊழியர்களும் யாழ்ப்பாணம்

(CR.45317) E-1


## கதிர்காமம் உற்சவம் 26.06.2025

### விசேட பஸ் சேவை "சிங்ககிரி எக்ஸ்பிரஸ்"

யாழ்ப்பாணம் மாலை - 3.50 மணி
வவுனியா மாலை - 7.00 மணி
கதிர்காமம் இரவு - 11.00 மணி

கட்டணம் - 2100/-
(ஒரு வழிக் கட்டணம்)




தொடர்புகளுக்கு (யாழ்ப்பாணம்)
வரணி ஆசன பதிவகம்
352, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2868, 077 604 8921
077 791 7691, 077 153 1406

தொடர்புகளுக்கு (கதிர்காமம்)
076 155 9059, 077 529 9015, 077 978 7824

(CS/855) J-1


## விடத்தல் விநாயகர் காவாக்குளம் வைரவர் ஆலயம்

### வருடாந்த பொங்கல் விழா தொடர்பான அறிவித்தல்

**23.06.2025 - 24.06.2025**

மேற்படி ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 23.06.2025 திங்கட்கிழமை விடத்தல் விநாயகர் ஆலயத்திலும், 24.06.2025 செவ்வாய்க்கிழமை காவாக்குளம் வைரவர் ஆலயத்திலும் நடைபெறவுள்ளது என்பதனை பக்த அடியார்கள் அனைவருக்கும் அறியத்தருவதுடன் **25.06.2025ம் திகதி காலை 06.00 மணியளவில் ஆடு, கோழி ஏலத்தில் விடப்படும்** என்பதனையும் அறியத்தருகின்றோம்.

இடம்:- தம்பிராய், பூநகரி

தொடர்புகட்கு:-
0774659877, 0772463027, 0778587033

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கும் ஹாட்வெயார் நிறுவனத்திற்கு டீசல் இயந்திரங்கள் மற்றும் இலத்திரனியல் கருவிகள் (Power Tools) திருத்தக்கூடிய அனுபவம் வாய்ந்தவர்கள் தேவை.

CV Whatsapp செய்யவும்

Whatsapp No - **077 923 4668 , 021 228 3663**

(CS/3459) (B) D

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் பொதுக்கூட்ட அறிவித்தல்

எமது சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபை தெரிவும் எதிர்வரும் (29.06.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் சங்கப்மனைனயில் நடைபெறவுள்ளது. அனைத்து அங்கத்தவர்களும் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இணைச் செயலாளர்

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

**359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

(துர்க்கா மணி மண்டபத்திற்கு அருகாமையில்.)

**077 138 7596, 071 999 9306**

## வேலையாள் தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கும் ஹாட்வெயார் நிறுவனத்திற்கு கணக்காளர் தேவை.

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CV Whatsapp செய்யவும்

Whatsapp No - **077 717 0624 , 021 228 3663**

(CS/3459) (A) D

## வேலையாள் தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கும் ஹாட்வெயார் நிறுவனத்திற்கு கணினி தரவுநிரற்படுத்துனர் தேவை. [சஹஅயசல நுவெசலஇ புகு]

[இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்]

CV Whatsapp செய்யவும்

Whatsapp No - **077 717 0624 , 021 228 3663**

(CS/3459) (C) D

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் ஆயுள்வேத மருந்தக மருத்துவர் திருமதி. துளசி சாருஜன் அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர் **இராசேந்திரம் சிறிராசா**

அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம், வலி. தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

## வீடு வாடகைக்கு உண்டு

இராமநாதன் வீதி பல்கலைக்கழகத்திற்கு முன்பாக அமைந்துள்ள மேல் வீடு வாடகைக்கு உண்டு

தொடர்பு: **076 882 8694, 077 411 8851**

## ROYAL GRANITE CORNER

SINCE-2016




**வெற்றிடம்**

- வேலைத்தள உதவியாளர்கள் (அனுபவம் தேவையில்லை)
- அலுமினியத் தொழிலாளர்கள்
- வெல்டர்கள் (WELDER)
- தச்சு வேலை செய்பவர்

அனுபவம் : 1 வருடம்


வயது : 45 வயதுக்கு கீழ்

➡ தங்குமிட வசதிகள் வழங்கப்படும்

➡ சம்பளம் 60000 - 90000

இடம் : யாழ்ப்பாணம்

மேலும் தகவலுக்கு : **0773580547**



## காட்டுத்தடிகளுடன் ஒருவர் கைது

விசுவமடுப் பகுதியில் இருந்து கப்ரக வாகனத்தில் காட்டுத் தடிகளை அனுமதியின்றி வெட்டி கப்ரக வாகனத்தில் எடுத்துச் சென்ற ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். தருமபுரம் பொலிஸாருக்கு நேற்று கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப் பட்ட வீதிச் சோதனை நடவடிக்கையில் அவர் கைதுசெய் யப்பட்டார். சந்தேகநபரை நேற்று கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்ட தற்கமைய பிணையில் விடுவிக்கப்பட்டார். (சு-113)

## யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் அமைந்துள்ள திண்ணை பார்ம் (Thinnai Farm) நிறுவனத்திற்குப் பின்வரும் வேலை வெற்றிடங்களுக்கு ஊழியர்கள் தேவை:

- வெய்ட்டர் (Waiter)
- உணவுப் பரிமாறும் கெப்டன் (F&B Captain)
- அறை பராமரிப்பு பணியாளர் (Room Attendant)
- சமையல்காரர்கள் (Kitchen Cook)
- சமையலறை உதவியாளர்கள் (Kitchen Stewards)

**முன் அனுபவமுள்ளவர்கள் மட்டுமன்றி, அனுபவம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

**ஊதியத்துடன் வழங்கப்படும் நன்மைகள்:**

- கவர்ச்சிகரமான சம்பளம்
- சேவை பணம் (Service Charge)
- வேலை நேர உணவு (Duty Meal)
- மருத்துவ காப்புறுதி (Medical Insurance)

என்பன வழங்கப்படும்.

**உங்கள் விண்ணப்பங்களை *WhatsApp* மூலமாக கீழ்க்கண்ட எண்ணிற்கு அனுப்புங்கள்:**

**076 752 8628**

**மேலதிக தகவலுக்கு:**

**076 389 4995 / 076 752 8628**



## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு

## உயர் திருவிழா - 2025 அறிவித்தல்

கோவிலில் வருடாந்த உயர்திருவிழா 26.06.2025ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11.07.2025ஆம் திகதியன்று தெப்போற்சவத்துடன் நிறைவுபெறுவதற்கு திருவருள் கைகூடியுள்ளது.

உயர்திருவிழாக்காலத்தில் நிதி வசூலிப்பதற்கென தனிநபரிடமோ, பொது அமைப்புக்களிற்கோ அனுமதி கோவிலினால் வழங்கப்படவில்லை. எனவே அடியவர்கள் அம்பாளுக்கு நிதி செலுத்துவதாக இருந்தால் கோவிலின் வங்கி கணக்கு இலக்கங்களான

**இலங்கை வங்கி :- 7687860 / 86645863**

**வர்த்தகவங்கி :- 1060012330**

என்பவற்றில் வைப்புச்செய்யலாம் அல்லது தபால்மூலம் அனுப்புவதாக யிருந்தால் **பொருளாளர், அறங்காவலர்சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் அல்லது நேரடியாக ஆலயத்திற்கு வருகைதந்து செலுத்தலாம் என்பதனை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

**அறங்காவலர் சபை**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்**
**நயினாதீவு**

**தொலைபேசி இல :** 021 432 3440, 021 432 3447


(CR/45720) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரையாண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 . 04 . 1944

உதிர்வு 27 . 12 . 2024



அன்புக்கும் மரியாதைக்கும் உரிய

அமரர் திரு.

## வைரவப்பிள்ளை செல்வரட்ணம்

(செல்வம் பிறதர்ஸ் உரிமையாளர்)

"உயிர் எனும் ஒளி நிழலாய் ஒளிந்தாலும், உணர்வில் மறைவதில்லை"

இவரது ஆன்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS 58632) E

களஞ்சிய அறை விற்பனைக்கு

யாழ் வண்ணார்பண்ணை காங்கேசந்துறை வீதியில், 424/3 இலக்க அறை (unit) 9x8 அடி அகலம் விற்பனைக்கு உள்ளது. களஞ்சியமாகவோ, காரியாலயமாகவோ பாவிக்கக்கூடியது.

தனி மின்சாரம், நீர் வசதியுள்ளது.

தொடர்புகளுக்கு: 077 675 1649

(CS 58636) E

The Royal College of Jaffna

தனியார் கல்வி நிறுவனம் - சங்கானை

ஆண்டு 10, O/L, A/L கலை, வர்த்தக மாணவர்களுக்குத் தனியாக அல்லது சிறுகுழுக்களாகச் சிறந்த ஆசிரியர்கள் மூலமாக வகுப்புகள். பாடங்களில் "A" சித்தி பெறுவது உறுதி.

பிரான்பற்று வீதி, சங்கானை


தொடர்பு: 077 675 1649

(CS 58636) E

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 01 . 1950

மறைவு 21 . 06 . 2025



## நாகமுத்து நவரத்தினம்

(உரிமையாளர் - நவரத்தினம் தச்சுத்தொழிலகம்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து நவரத்தினம் அவர்கள் நேற்று (21.06.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

நவரத்தினம் தச்சுத்தொழிலகம்
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல் :
குடும்பத்தினர்
077 713 0872

(CS/ 58633) J-1

# மரண அறிவித்தல்



## கதிரவேலு குமாரசாமி

சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் கொக்குவில், கொழும்பு, நீர்வேலி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு குமாரசாமி அவர்கள் கடந்த (14.06.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - அன்னம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், இராசமலர் (மலர்) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரி, யோகேஸ்வரி, சிவசுப்பிரமணியம், நடராசா மற்றும் கமலாதேவி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற சுஜித்தா மற்றும் சுரபி, சயந்தன், துர்க்கா, குகதர்சினி (குமுதா), நந்தகோபி (நந்தா) அவர்களின் பாசமிகு தந்தையும் சிவகுமார், சோபா, ரமேஷ், உதயகுமார், சுரேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரவீனா, பிரவீமன், பாடினி, ஆருனி, சபிநயா, தனோ, அப்ஷனா, அனிர்வின் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (22.06.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 08.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 20.03.1942

மறைவு 14.06.2025

நீர்வேலி கந்தசுவாமி கோவிலடி
நீர்வேலி தெற்கு, நீர்வேலி

தகவல்:
குடும்பத்தினர்
021 205 4847

(CR/58622) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 24.10.1955 — மறைவு 21.06.2025

## செல்வி. சரோஜினிதேவி அம்பலவாணர்

பிறப்பிடம் வசிப்பிடம் நாவலர் வீதி, யாழ்ப்பாணம் கொண்ட செல்வி. சரோஜினிதேவி அம்பலவாணர் அவர்கள் நேற்று (21.06.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகளும், இராசலிங்கம் (கொழும்பு), சுந்தரலிங்கம் (யாழ்ப்பாணம்), புவனேஸ்வரி (கனடா), பஞ்சலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகராணி (கொழும்பு), சாயுத்தியதேவன் (கனடா), பாலசாந்தி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2025) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 02.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

116(160) நாவலர் வீதி

தகவல்: குடும்பத்தினர்
076 172 1964, 076 656 1767

**இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை**

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.

பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply
Www.inaipa.com

# அந்தியெட்டி அழைப்பு

## அமரர் சந்திரராசா விதுஜாம்பாள்

மலர்வு 04.09.1995 — உதிர்வு 21.05.2025



எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த கடந்த (21.05.2025) புதன்கிழமை அன்று சிவபதமடைந்த அமரர் சந்திரராசா விதுஜாம்பாள் அவர்களின் அந்தியெட்டி அழைப்பு இன்று (22.06.2025) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

துர்க்காபுரம்
மல்லாகம்

குடும்பத்தினர்.
077 959 0729

# யாசகம் பெறும் சிறுவர்கள்; கண்டறிய விசேட நடவடிக்கை

பாதுகாவலர்கள் இன்றி யாசகம் எடுத்து பொருள்களை விற்பனை செய்து கொண்டிருக்கும் சிறுவர்களைக் கண்டறிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.


இந்த நடவடிக்கையை தேசிய குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம், குழந்தைகள் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பணியகம் மற்றும் குழந்தைகள் மற்றும் பெண்கள் பணியக தலைமையகத்துடன் இணைந்து செயற்படுத்துகிறது.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது இதுபோன்ற 21 சிறுவர்கள், தொடர்புடைய அதிகாரிகளின் காவலில் எடுக்கப்பட்டு உரிய பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

# புதிய உயர்தலைவரை தெரிவுசெய்தார் கமேனி

ஈரானின் உயர்தலைவர் அயதுல்லா அலி கமேனிக்குப் பின்னர், ஈரானின் உச்ச தலைவராகச் செயற்படப்போகும் நபர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அயதுல்லா அலி கமேனியைக் கொல்வோம் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது. அலி கமேனி பதுங்கியிருக்கும் இடம் தொடர்பில் தெரிந்து வைத்துள்ளதாக அமெரிக்காவும் கூறியுள்ளது. இதனால், எப்போது வேண்டுமானாலும் கமேனி கொல்லப்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றது. இவ்வாறான நிலையிலேயே, தனக்குப் பின்னர் உச்ச தலைவராகச் செயற்படப்போகும் நபரை கமேனி தெரிவுசெய்துள்ளார். (ம)

# மரண அறிவித்தல்



தோற்றம் 28.10.1949 — மறைவு 20.06.2025

## திரு. இராசா பாலச்சந்திரன்

(யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஓய்வு பெற்ற விஞ்ஞான பாட ஆசிரியரும், இணுவில் எவரெஸ்ட் கல்வி நிறுவன முன்னாள் நிர்வாகியும், இணுவில் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபை முன்னாள் தலைவரும், இணுவில் அறிவாலய முன்னாள் தலைவரும்)

இணுவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசா பாலச்சந்திரன் அவர்கள் (20.06.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான கணமலர், நேசமலர், தனபாலசிங்கம், ஆகியோரினதும் மற்றும் கலாவல்லியின் அன்பு சகோதரனும், காலஞ்சென்றவர்களான மகேந்திரன், தங்கேஸ்வரன், ஆகியோரினதும் மற்றும் சண்முகமலர், சிவமதி, ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரசன்னா (லண்டன்), யாழினி (கொழும்பு), கோகுலன் (லண்டன்), பிரவீணா (ஆசிரியர் - யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்சினி (லண்டன்), சிவாஸ்கரன், (ஆசிரியர் - கொ/இராமநாதன் இந்து - மகளிர் கல்லூரி), ஜெனனி (லண்டன்), ஜெயகாந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேசசெயலகம் நல்லூர்), ஆகியோரின் அன்பு மாமனாரும், அக்ஷரன், அபிஷன், கேசிகன், ஆருக்சன், பானுஜன், அக்சிகா, கேசிகா, அர்த்தனா, கர்ஷனா, அவந்திகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.06.2025) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இரகுபதி வீதி,
2ம் குறுக்கு தெரு,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## உதயபுரம்...

ஜூன் மாதம் 7ஆம் திகதி வீடொன்றுக்குள் புகுந்த வன்முறைக் குழு சகோதரர்கள் இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியிருந்தது. விசாரணையின்போது, மூன்று மோட்டார்சைக்கிள்களில் சென்ற 9 பேரே இந்தத் தாக்குதலை நடத்தினார்கள் என்பது தெரியவந்தது. இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின்போதே மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து மூன்று வாள்களும் ஒரு மோட்டார்சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 25, 20, 28 வயதுடையவர்கள் என்றும், அவர்கள் உதயபுரம், அரியாலை, நாயன்மார்கட்டு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு இந்தக் கைது நடவடிக்கையை மேற்கொண்டது. ஏனையவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

# கரையொதுங்கும் பிளாஸ்ரிக் துகள்கள்; அவதானிக்க விசேட செயற்றிட்டம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தீவகத்தில் தற்பொழுது கரையொதுங்கி உள்ள பிளாஸ்ரிக்துகள்கள் ஏனைய பிரதேசங்களிலும் பரவியுள்ளதா? என அவதானிக்க விசேட செயற்றிட்டமொன்றை கடல்சூழல்சார் பாதுகாப்பு அதிகாரசபை முன்னெடுக்க வுள்ளது.

இதுதொடர்பில் கடல் சூழல்சார் பாதுகாப்பு அதிகாரசபையின் பிராந்திய முகாமையாளர் சிறீபதி தெரிவிக்கையில்,

தற்போது வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, காரைநகர் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் அடையாளங் காணப்பட்டுள்ளன . இந்த நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஏனைய கரையோரங்களிலும் அவை கரையொதுங்கியுள்ளனவா என அவதானிக்கும் முகமாக நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அனைத்து அரச திணைக்களங்களையும் குறித்த மேற்பார்வை நடவடிக்கைகளில் ஈடுபடுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் - என்றார். (ச-125)

## பாரவூர்தியோடு...



உயிரிழந்தவர் 33 வயதுடையவர் என்றும், அவர் விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மோட்டார்சைக்கிளில் பயணித்த மற்றுமொருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-113-125)

## யாழ். நகர...

லாக வெளிவந்துள்ளன. இதன்படி, விக்டோரியா வீதியில் இருந்து வைரவர் கோவில் வீதி வரையுள்ள பொன்னம்பலம் வீதி (மணிக்கூட்டுக் கோபுர வீதி) ஒருவழிப் பாதையாக (உள்நுழைவது மட்டும்) மாற்றப்பட்டுள்ளது.

மருத்துவமனை வீதியில், கஸ்தூரியார் வீதிச் சந்தியில் இருந்து சத்திரச்சந்தி வரையான வீதிப் பகுதியில், பகல் பொழுதுகளில் கனரக வாகனங்களில் பொருள்களை ஏற்றி இறக்க முடியாது என்றும், இரவு 7 மணியிலிருந்து காலை 6 மணி வரை மட்டுமே கனரக வாகனங்களில் பொருள்களை ஏற்றி இறக்கமுடியுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-ம-26)

## இஸ்ரேலுக்கு...

அனுப்பும் திட்டங்கள் எவையும் இல்லை என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் கோசல விக்கிரமசிங்க இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்பாராத வகையில் மத்திய கிழக்கில் மோதல் நிலைமைகள் உக்கிரமடைந்துள்ளன. எனவே அந்த நாடுகளிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்புத் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம். குறித்த நாடுகளில் தொழில்புரியும் இலங்கைப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும் தற்போதைய நிலைமையில் போர் இடம்பெறும் நாடுகளுக்கு தொழிலுக்காக பணியாளர்களை அனுப்புவதையும் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம். போர்ப்பதற்றம் நீங்கும்வரை இந்த இடைநிறுத்தம் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும். இஸ்ரேலில் இதுவரை 5 இலங்கையர்கள் காயமடைந்துள்ளனர். இஸ்ரேலிலுள்ள இலங்கைத் தூதரகம் அவர்களுக்கான மருத்துவ வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது - என்றார். (அ-ம-இ)

## ஐஸ்...

வினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய, யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் போதைத்தடுப்புப் பிரிவால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களுக்கு எதிரான சட்டநடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (அ-ம-26)

## நயினாதீவு...

கிழமை மாலை ஆலய வீதியில் ராஜநாகம் அருட்காட்சி வழங்கியுள்ளது.

ஆலய மஹோற்சவப் பெருவிழாவுக்கு முன்னர் வருடாந்தம் இவ்வாறு ராஜநாகம் ஆலய வீதியில் காட்சி வழங்குவது வழமை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ம-66)

## ‘மின்தூக்கியில்’...

தெரிவித்துள்ளனர். வைரவநாதன் டிலக்சன் (வயது-20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்துக்குள்ளான இளைஞர் உடனடியாக மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட நிலையில், அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்பதை மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26)

## யாழ்....

மாகாணங்களின் கடற் சூழல்சார் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சிறீபதி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் வேலணை, ஊர்காவற்றுறை மற்றும் நெடுந்தீவு பிரதேச செயலாளர் பிரிவுகளில் முப்படையினரின் உதவியுடன் இணைந்து பிளாஸ்ரிக் துகள்களை அகற்றிவருகின்றோம். இதுவரை ஆயிரம் மூடைகள் பிளாஸ்ரிக் துகள்களை மணலுடன் இணைந்து திரட்டியுள்ளோம். இவற்றின் எடை 30 ஆயிரம் கிலோவரை காணப்படுகின்றது. விரைவில் அவை தரம்பிரிக்கப்பட்டு ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (அ-ம-125)

## ஆவணங்கள்...

விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பைத் தவறாகப் பயன்படுத்தி சிறைச்சாலைகளில் இருந்து மோசடியான வகையில் கைதிகள் விடுவிக்கப்பட்டமை அண்மையில் தெரியவந்தது. இதையடுத்து, இந்த விடயம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் துறை விசாரணை நடத்தி வருகின்றது. இந்த விசாரணைகளின் ஒரு பகுதியாகவே, கடந்த காலங்களில் ஆவணங்கள் எதுவும் இல்லாமல் 30 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்ற விடயம் தெரியவந்துள்ளது. இந்த விடயம் தொடர்பிலும் தற்போது விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (அ-ம-இ)

## வலிகாமம்...

பொதுமக்களாலும் மயிலிட்டிச் சந்தியில் நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் எதிர்வரும் 25ஆம் திகதிவரை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்ததாவது:-

வலிகாமம் வடக்கில் காணிகள் விடுவிக்கப்படுவதாகக் கூறப்படுகின்ற போதிலும், இன்னமும் இரண்டாயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் படையினரின் கட்டுப்பாட்டிலேயே காணப்படுகின்றன. மக்களின் விவசாய நிலங்கள், குடியிருப்பு நிலங்கள் மற்றும் தொழில் நிலையங்கள் உள்ளிட்ட பல பகுதிகள் தொடர்ச்சியாக இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன.

போர் முடிவடைந்த பின்னர் ஆட்சிக்கு வந்த தரப்பினர் மக்களின் காணிகளைப் படிப்படியாக விடுவித்தனர். ஆனால், விடுவிக்கப்பட்ட காணிகளில் மக்கள் தங்களின் பொருளாதாரத்தைச் சுயமாகக் கொண்டுநடத்தமுடியாத நிலையே காணப்படுகின்றது. எனவே, படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள 2 ஆயிரத்து 400 ஏக்கர் நிலப்பரப்பையும் உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர். (அ-ம-26)

## செம்மணி...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக், நாளை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இதன் தொடர்ச்சியாக எதிர்வரும் 25ஆம் திகதி அவர் யாழ்ப்பாணத்துக்கும் பயணம் மேற்கொண்டு பல்வேறு தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். அத்துடன், யாழ்ப்பாணத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பான அவதானிப்புகளிலும் அவர் ஈடுபடவுள்ளார்.

மனித உரிமைகள் ஆணையாளரின் யாழ்ப்பாணத்துக்கான நிகழ்ச்சி நிரலில் செம்மணிப் புதைகுழிக்கான வருகையும் இடம்பெறவேண்டும் என்று பல தரப்பினரும் வலியுறுத்திவந்தனர். காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கான போராட்டங்களின்போதும் இந்த வலியுறுத்தல்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இதன் தொடர்ச்சியாகவே, அவர் செம்மணிப் புதைகுழியைப் பார்வையிடுவார் என்று அறியமுடிகின்றது. இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், இந்தப் பயணத்துக்கான பூர்வாங்க நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (அ-ம-26)

## ஜூலை...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் கல்கிசை இடையே குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயில்சேவை கடந்த சில வாரங்களாக வார இறுதி நாள்களிலேயே முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் அண்மைக்காலமாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளின் நிமித்தமும், சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதமாகவும் ஜூலை மாதம் முதலாம் திகதிமுதல் இந்தச் சேவையை தினமும் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான நேர அட்டவணை விரைவில் அறிவிக்கப்படும் - என்றார். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச பயங்கரவாதத்துக்கு உதவிய நாடுகளில் தற்போது அவலநிலை!

## கோடீஸ்வரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜுன் 22

முள்ளிவாய்க்கால் பேரவலம் அரங்கேற அரச பயங்கரவாதத்துக்குத் துணைநின்ற இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளைத் தமிழ் மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். தமிழ்மக்கள் அன்று எதிர்கொண்ட நிலையை இவ்விரு நாடுகளும் இன்று எதிர்கொண்டுவருகின்றன என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் தமிழ்மக்கள் கொடூரமாக கொலை செய்யப்பட்டார்கள். இந்த நாடுகள் குண்டுகளைப் போடுவதற்கும், தடைசெய்யப்பட்ட வெடிபொருள்களை வழங்குவதற்கு உறுதுணையாக இருந்தனர். இன்று அந்த நாடுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் இறக்கின்றனர். இந்தநிலைமை மாற வேண்டும். போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு தம்மால் முடிந்த அழுத்தங்களை ஏனைய நாடுகளுடன் இணைந்து இலங்கை பிரயோகிக்க வேண்டும்-என்றார். (ஏ-44)


### காணி விற்பனைக்கு

தாவடி வடக்கு தாவடியில் வீடு கட்டுவதற்கு உகந்த 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(1 1/2 பரப்பாகவும் வழங்கப்படும்)
தொடர்புகளுக்கு:
077 255 0807
CR 4518

### வேலையாள் தேவை

K.K.S வீதி கோண்டாவிலில் உள்ள உணவகம் ஒன்றிக்கு அனைத்து வேலைகளுக்கும் ஆட்கள் தேவை. (ஆண், பெண் இருபாலரும் ஏற்றுக் கொள்ளப்படும்)
077 804 2561

### அலுவலக உதவியாளர் தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் தனியார் நிறுவனமொன்றிற்கு அடிப்படை கணினி அறிவுடைய பல்கலைக்கழக கல்வியினை முடித்த பெண் அலுவலக உதவியாளர் தேவை.
வயதெல்லை - 21 - 40
தொடர்புகளுக்கு:-
077 666 7051

### மணமகன் தேவை

யாழ் குருகுலம் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த 1987ல் பிறந்த (உயரம் 5' 5') தனியார் நிறுவனத்தில் உயர் பதவி வகிக்கும் மணமகளிற்கு யாழ்ப்பாணத்திற்குள் நன்கு படித்த அரச உத்தியோகம் பார்க்கும் அதே இன மதத்தைச் சேர்ந்த மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்புகளுக்கு:-
076 723 8147, 077 103 8863

### அண்ணா பொதிகள் சேவை

16+
UK - 1,350/=
FRANCE - 2,050
ஜேர்மனி - 1,900/=
கனடா - 2,550/=
0753305500 / 0703305500

### வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் பெண் வேலையாள் தேவை. (சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 076 632 3554


### காணி விற்பனைக்கு

வவுனியா தவசிக்குளத்தில் இரண்டு ஏக்கர் உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு.
50 தென்னைகள், நான்கு மாமரம் இரண்டு அறைகள் கொண்ட வீடு மற்றும் பயன்தரும் மரங்களுடன் 22 அடி சுற்றளவு கொண்ட தோட்ட கிணறும் உண்டு.
தொடர்புகளுக்கு:-
076 776 0459

### Shop Assistant / Worker

தென் மாகாணத்தில் உள்ள பலசரக்கு கடை ஒன்றில் பணி புரிவதற்கு ஆண் உதவியாளர் தேவை.
சம்பளம் :- 60,000/-
Location :- S.A.W & Sons, Hambantota
Contact :- 0774803379


# மரண அறிவித்தல்



## நவரெத்தினம் தனலட்சுமி

பொன்னையா வீதி, ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நவரெத்தினம் தனலட்சுமி அவர்கள் கடந்த (16.06.2025) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - கண்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நவரெத்தினத்தின் அன்பு மனைவியும், உதயகுமார் (கனடா), உதயரஞ்சினி (கனடா), கிருஸ்ணகுமார் (நெதர்லாந்து), வசந்தினி (கொழும்பு), இரத்தினகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கோமதி (கனடா), கிருபானந்தன் (கனடா), வாகுகசுந்தரி (நெதர்லாந்து), காலஞ்சென்ற ஸ்ரீதரன் (கொழும்பு), ஜெகதாம்பிகை (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், மனோரஞ்சிதம், முருகையா, சண்முகலிங்கம் மற்றும் தங்கலெட்சுமி, குமாரவேலு, பாலபாஸ்கரன், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுஜீதா, சுஜிராஜ், நிகஷ்ரன், ரம்யன், ஹரிஸ்டன், சோபன், சோபிகா, ஜெனார்த்தனி, சர்வாதினி, நிருஷ்சன், மிலானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சக்திவீரன், வைஸ்னா, ஸ்ரீ கிருத்திக், ஸ்ரீ ஆராதிக் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.06.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 20.12.1936 | மறைவு 16.06.2025


பொன்னையா வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/58634) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**உயர்வகை பல் வைத்திய சேவைக்கு....** ஆரியகுளச் சந்தியில், **Professional Dental Care**



**INTERNATIONAL DENTAL CARE**
INTERNATIONAL DENTAL CARE HOSPITALS (PVT) LTD
professional Dental Care in Sri Lanka
IDC

**Colombo Branch**
NO. 79/9, W.A.Silva Mw,
Wellawatta, Colombo - 06,Sri Lanka.
Tel : + (94) 11 2507070,
Mob : + (94) 77 0139372, + (94) 77 0139376
W.App : + (94) 76 5224273

**Vavuniya Branch**
Raaj Medical Lab.
No:10, Bazaar Street, Vavauniya, Sri Lanka.
Tel : + (94) 24 2221577
Mob : + (94) 77 0139374
W.App : + (94) 77 059 5221

**Jaffna Branch**
NO. 84, Stanly Road,
Jaffna, Sri Lanka.
Tel : + (94) 21 2220833
Mob : + (94) 77 0031547
W.App : + (94) 77 003 1548

## கடை வாடகைக்கு
குளப்பிட்டி சந்திக்கு அருகாமையில்
கடை (1st Floor)
வாடகைக்கு உண்டு.
**077 704 1582, 077 506 0749**

## காணி விற்பனைக்கு
மானிப்பாய் சுதுமலை அம்மன் ஆலயத்திற்கு மிக அருகாமையில் பிரதான வீதியில் இருந்து 2 ஆவதாக அமைந்த 5 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. ஒரு பரப்பு 60 இலட்சம்
தொடர்பு: **076 428 4896**

## காணி விற்பனைக்கு
கைதடி நுணாவில் A9 வீதி முகப்பாகக் கொண்ட 3600 சதுர அடி கட்டடம் மற்றும் Bulk power Supply உடன் கூடிய 7 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு :
**076 822 7515**

## வீடு விற்பனைக்கு
பம்பலப்பிட்டியில் 5 units கொண்ட தொடர்மாடியில் 3 Bedrooms, 2 Bathrooms, Hall, kitchen வசதிகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
விலை 38 மில்லியன்
பேசித்தீர்மானிக்கலாம். No Brokers.
தொடர்புகளுக்கு: **077 774 7105**

## காணி விற்பனைக்கு
நவக்கிரியில் முதலீட்டுக்கு சிறந்த 2-பரப்பாக பிரிக்கப்பட்ட 20 காணித்துண்டுகள்
- வங்கிக்கடன் பெறக்கூடிய தெளிவான ஆவணங்கள்
- போக்குவரத்துக்கு இலகுவான தார் வீதி
- நல்ல தண்ணீர் வளம்
- அமைதியான குடியிருப்பு சூழல்

விலை விவரம்:
LKR 17 இலட்சம் / பரப்பு (மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்)
உடன் கொள்வனவு செய்பவர்களுக்கு 10% விசேட விலை சலுகை உண்டு....
தொடர்பு: **077 082 1010**, **076 662 2216**

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு
பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.
தொடர்பு:- Whatsapp:- **0044 740 537 3526**

## வேலையாட்கள் தேவை
திருநெல்வேலியில் உள்ள பண்ணைக்கு வேலையாட்கள் தேவை
சம்பளம் : ஆண் - 60000 - 70000
பெண் - 45000
தொடர்பு: **077 354 9140**

## காணி விற்பனைக்கு
வரணியில் 45 பரப்பு, 28 பரப்பு தென்னங்காணி விற்பனைக்கு உண்டு
தொடர்பு: (Whatsapp) **+1 416 471 3353**

## காணி வீடு விற்பனைக்கு
பருத்தித்துறை கடற்கரை வீதியில் அமைந்துள்ள (கடற்கரை வீதி முதலாம் குறுக்குத் தெரு சந்தி) 3 பரப்புக் காணி, வீடு விற்பனைக்கு உண்டு. விலை 3.5 கோடி ரூபா (CAD 160,000) உடனடி விற்பனைக்கு.
Email:- pointpedroproperty@gmail.com
077 622 5033, 077 714 8034

**LAND AND HOUSE SALE**
Point pedro, Beach road property (Approxmately 30 Perches) Located at the Intersection of Beach Road and First Cross Street in downtown Pointpedro is available for quick sale the asking price is 350 Lakhs Rupees (CAD 160,000) for forther info and
Email:- pointpedroproperty@gmail.com
**077 622 5033, 077 714 8034**

## வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் 2 1/4 பரப்புக் காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
Whats app:-
**+61 421 290 240**

## மணமகள் தேவை
யாழ் இந்து 1986 ஆம் ஆண்டு பிறந்த தனியார் துறையில் அதிக சம்பளத்தில் உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு - **070 699 9678**

## மலிவு விற்பனை
AC, கட்டில், கங்கர், தென்னம் பிள்ளை, கமுகு கண்டு, கமரா, T.V, சப்பாட்டு மேசை, (வட்டம் கண்ணாடி கதிரைகளுடன்.
**077 741 2713**

## காணி விற்பனைக்கு
* மீசாலையில் 4 பரப்பு காணி விற்பனைக்கு.
* சுன்னாகம் - பொக்கனை நாகதம்பிரான் வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்கு.

**077 794 8012**

## வேலையாள் தேவை
எமது கால்நடை உற்பத்தி விற்பனை நிலையத்திற்கு ஆண், பெண் வேலையாள் தேவை. ஆண் (Light vechicle Licence Auto, motorcycle உட்பட)
JAFFNA EGG CENTER
**075 258 9665 / 077 851 1265**

## பராமரிப்பாளர் தேவை
யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றை பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். 35 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: **075 880 7718**

## வீடு வாடகைக்கு
நல்லூர் கோவிலில் இருந்து 300 M தூரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய வீடு குறிகியகாலத்திற்கு (நாளாந்த அடிப்படையில்) வாடகைக்கு உண்டு.
தொடர்பு: **077 443 2989**

## காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் இருபாலையில் காணி விற்பனைக்கு உண்டு
தோட்டம் மற்றும் வீடு கட்டுவதற்கு பொருத்தமானது
தொடர்பு: **077 984 8786**

## கடை வாடகைக்குத் தேவை
யாழ்ப்பாணம் பிரதான வீதியில் கடை வாடகைக்குத் தேவை. அத்துடன் சேர்ந்து அலுவலகம் நடாத்துவதற்கான கட்டமைப்புத் தேவை
தொடர்புகளுக்கு:
**074 026 4148**

## பெண் வேலையாள் தேவை
நல்லூரில் அமைந்துள்ள புடவைக் கடை ஒன்றிற்கு முன் அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் உடனடியாக தேவை.
தொடர்பு:- **075 342 1991**

## விற்பனைக்கு
குளிர்சாதனப்பெட்டி (LG), வோசின் மிஷின் Toshipa, கண்ணாடி அலுமாரி, ஹாஸ் சிலிண்டர், கணனி மேசை மொனிற்றர் போன்ற பொருட்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: **077 7830 632**


இஸ்ரேலுக்கு
## துருக்கி கண்டனம்
மத்திய கிழக்குப் பிராந்தியத்தை இஸ்ரேல் முழுமையான பேரழிவுக்கு இட்டுச் செல்கின்றது என்று துருக்கியின் அதிபர் எர்டோகன் குற்றஞ்சாட்டியுள்ளார். (ம)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி இல. 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

கணம்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்
பிணம்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும் –
மணங்கொண்டீண்டு
உண்டுண்டுண் டென்னும் உணர்வினால் சாற்றுமே
டொண்டொண்டொ டென்னும் பறை.

– நாலடியார்

A

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 ஆனி 8 ஞாயிற்றுக்கிழமை (22.06.2025) சிகரம் :150

ஜெரா


செம்மணி மனிதப் புதைகுழி மீண்டும் பேசத்தொடங்கியிருக்கிறது. பேரவலத்தின் பின் அங்கு புதைக்கப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் அழுகுரல்கள் நீதியின் கதவைத் தட்டத்தொடங்கியிருக்கின்றன. கடந்த ஏப்ரல் மாதம் அரியாலை சித்துப்பாத்தி மயானத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக கிடங்கொன்றை வெட்டியபோது மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகளின் பயனாக கடந்த வாரத்தில் முறைப்படியான புதைகுழி அகழ்வுகள் குறித்த பகுதியில் இடம்பெற்றன. இந்த அகழ்விற்காக சித்துப்பாத்தி மயானத்தில் ஏற்கனவே மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட குழி முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனாலும் அதிகம் ஈரலிப்பாக குறித்த அகழ்வுக்குழி காணப்பட்டதனால், அதனை அப்படியே விட்டுவிட்டு எழுமாற்றாக ஓரிடத்தில் அகழ்வாய்வை நடத்தினர். அந்த இடத்தில் மாத்திரம் நான்கு நாள்கள் இடம்பெற்ற அகழ்வாய்வுகளில் சிறுவர்களது என சந்தேகிக்கப்படும் மனித எலும்புக் கூடுகள் உட்பட 19 எலும்புக்கூடுகள் இதுவரையில் முழுமையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மிகப்பெரும் மனிதப் புதைகுழி காணப்படலாம் எனச் சந்தேகிக்கப்படும் செம்மணி வெளியில் தொடர்ச்சியாக 45 நாள்கள் புதைகுழி அகழ்வுகளை மேற்கொள்ள நீதிமன்றம் அனுமதியளித்திருக்கின்றது. கடந்த சனிக்கிழமையுடன் (07) முதலாம் கட்டமாக நிறைவுக்குவந்த அகழ்வுப்பணிகள், எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம் இரண்டாம் கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்நிலையில் செம்மணி மனிதப்புதைகுழி விடயத்தை பற்றி பின்னோக்கி பார்ப்பது காலத்தேவையானதாகும். முதன்முதலில் பாடசாலை மாணவி கிருசாந்தி படுகொலையுடன் ஆரம்பமான செம்மணி மனிதப்புதைகுழி வெளிக்கொணர்வுகள் இலங்கைத்தீவில் தமிழர்கள் எப்படியெல்லாம் இனவழிப்பு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பதிவுசெய்யவேண்டியுள்ளது. அதற்கான ஒரு பதிவாக இந்தப் பெருங்கட்டுரைத் தொகுப்பு அமையும்.

(உள்ளே...)

# செம்மணி:


## முடிவுறாப் புதைகுழிகளின் கதை



புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

B (முதலாம் பக்கத் தொடர்ச்சி)



ஈழத்தமிழின அழிப்புக்கு திரட்சித் தன்மைமிக்க ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி இருப்பதையும், பல்வேறு காலகட்டங்களிலும், பல வடிவங்களில் இன அழிப்பு அல்லது இனச் சிதைப்பு மேற்கொள்ளப்பட்டதென்பதையும் அந்தத் தரவுத் தேட்டங்கள் காணத்தவறியிருக்கின்றன.

ஓர் இன அழிப்பின் முதல் இலக்கு ஆண்கள் என்றால், அதன் இரண்டாம் இலக்கு பெண்கள்தான். ஆயிரம் ஆண்களைக் கொன்று வீசுவதால் எழும் அதிர்வைவிட, ஒரு பெண்ணை பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கிக் கிழித்துப்போடுதல் பேரதிர்வை ஏற்படுத்தும். இன அழிப்புக்குள்ளாக்கும் மக்களின் உளவியலை மோசமாக மிரட்சியடையச் செய்யும். கிருசாந்தி தொட்டு, இசைப்பிரியா வரை அதனை அவதானித்திருக்கிறோம். அனுபவித்திருக்கிறோம். அதில் முக்கியமான இனவழிப்பு ஆவணமாக யாழ்ப்பாணம் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தியின் படுகொலையும், அதற்குப் பின்னரான செம்மணிப் புதைகுழியும் பதிவுசெய்யப்படல் வேண்டும்.


செம்மணி ஓர் இனத்தின் மீது நடத்தப்பட்ட கூட்டு இனப்படுகொலையின் அடையாளம். ஆனால் அது விரைவாகவே மறக்கப்பட்டாயிற்று. இங்கு பிரயோகமாகும், தாமதிக்கப்படும் நீதி வழங்கலானது, அநீதிக்கு சமமானதாக மாறிவிடுகின்றது.

தமிழர்கள் மனங்களிலிருந்து என்றும் அகலாத படுகொலை நினைவுகளுக்குள் செம்மணியும் உள்வாங்கப்படல்வேண்டும். 600க்கும் மேற்பட்ட தமிழ் உயிர்கள் புதைக்கப்பட்ட அந்த வெளி ஒரு படுகொலையின் காட்சிப் படிமமாக நிறுவப்பட்டால் அது தெற்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் வரும் சுற்றுலாவிகளுக்கு நம் இனத்துயர் செய்தியை அறிவிக்கும்.

இதில் இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிடவேண்டும். வெறுமனே இனப்படுகொலை நடக்கின்றது என்பதை ஒரு சம்பவக் குறிப்பாக மட்டும், ஒரு வரியில் குறிப்பிட்டுத் தீர்மானம் வெளியிடல் போதாமைகளைக் கொண்டதாகக் கணிக்கப்படும். இங்கு நடந்தது இனப்படுகொலைதான் என்பதை நிரூபிக்க ஆதாரபூர்வமாக, சம்பவக் கோர்வையாக அவற்றை தொகுத்து வெளியிடவேண்டும். உலகளவில் அநீதிக்குள்ளான இனங்கள் அதனையே செய்திருக்கின்றன. அவ்வாறு செய்தலே அது ஆரோக்கியமுள்ள அரசியல் பயணமாக அமையும்.

'யாழ்ப்பாணம் வரவேற்கின்றது' வளைவு இப்போது புதிய வடிவம் பெற்றுவிட்டது. ஒருவித அபிவிருத்தியின் மெருகூட்டலுடன் அனைவரையும் வரவேற்றுக்கொண்டிருக்கிறது. ஈழத்தமிழர் மறந்துபோன வரலாற்றுப் பக்கங்களில் முக்கியமான மூன்று சம்பவங்களை இந்த மையம் வைத்திருக்கிறது.

1995 இல் இந்தச் செம்மணியை ஊடறுத்துச் செல்லும் ஒற்றைப் பாதையாலேயே ஒட்டுமொத்த யாழ்ப்பாண மக்களும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம்பெயர்வை மேற்கொண்டனர். 1996 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் இந்த இடத்தில்தான் கிருசாந்தி தொலைக்கப்பட்டாள். 2000 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட படையியல் நடவடிக்கை இந்த வளைவு வரை விரிந்திருந்தது.



கிருஷாந்தி மற்றும் மூவரின் சடலங்கள் கனத்தையில் வெள்ளியன்று தகனம்

பொலிஸார், ராணுவத்தினர் 11 பேர் கற்பழித்தனராம்!

இந்த மூன்று சம்பவங்களும் தமிழர்களால் மறக்கப்படமுடியாதவைதான். ஆனால் மறதியின் அரசியல் அனைத்தையும் மூடச் செய்திருக்கின்றது. விரும்பியோ, விரும்பாமலோ மறந்துபோவதை விரும்புகின்றோம். அப்படியான காலத்தில்தான் கிருசாந்தியை மறதியின் அடுக்குகளிலிருந்து மீண்டும் கிளறியெடுக்கவேண்டியிருக்கின்றது.

1996 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 07 ஆம் திகதி ஒரு விபத்து நடந்தது. சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் உயர்தரம் கற்றுக்கொண்டிருந்த மாணவியொருவரை இராணுவ வாகனம் மோதிக்கொன்றது. இராணுவத்துக்கு எதிராக மூச்சுக்கூட விடுவதற்கான சுதந்திரம் மறுக்கப்பட்டிருந்த அந்தக் காலத்தில் மாணவிகள் அமைதியாக சாவு வீட்டைக் கடைப்பிடித்தனர். வெள்ளைச் சீருடைகளுக்கு தனியான மரியாதையுண்டு என்ற பொது மதிப்பீட்டின் அடிப்படையில் தனியாகவும், சேர்ந்தும், தம் லேடீஸ் சைக்கிள்களில் நாவற்குழியிலிருக்கும் அந்த செத்த வீட்டிற்கு சென்றுவந்தனர்.

அந்த நம்பிக்கையை கையில் பிடித்துக்கொண்டு தன் சைக்கிளில் இறுதிச் சடங்கிற்குப் போன கிருசாந்தி தனியே வீடு திரும்பிக்கொண்டிருந்தாள். வெட்டைக்காற்று பேயென அடித்துக்கொண்டிருந்தது. எப்போதாவது கடக்கும் வாகனங்கள் அவளைக் கடந்துபோய்க்கொண்டிருந்தன. சிலர் அவளை அவதானித்துமிருந்தனர்.

அவர்கள் அவதானித்தவேளையில் இராணுவத்தினர் அவளை "யாழ்ப்பாணம் வரவேற்கிறது" வளைவுக்கு அருகில் நிறுத்தி விசாரித்துக்கொண்டிருந்தனர். அதன் பின்னர் அவளுக்கு என்ன நடந்தது என்ற விடயம் ஆறு வாரங்கள் கழித்து வந்த பத்திரிகைகளில் கொட்டை எழுத்துகளில் செய்தியாக வெளிவந்தது.

## செய்தி

"அச்சமயம் அங்குள்ள கொட்டகை ஒன்றுக்குள் இருந்த கோப்ரல் ஒருவர் மாணவியை உள்ளேகொண்டுவருமாறு கட்டளையிட்டதை அடுத்து சோதனைக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மாணவியை உள்ளேகொண்டு சென்றனர்.

மகள் பாடசாலையிலிருந்து திரும்பாததால் தாயாரும்,தம்பியாரும்அவளைத் தேடிப் புறப்பட்டனர். அவர்களும் அதே சோதனை முகாமை அடைந்தனர். அங்கு ஒரு மணித்தியாலம் வரை காத்திருந்தனர். அவர்களும் வீடு திரும்பாததையிட்டு அயலவர் ஒருவரும் அந்தச் சோதனை முகாமுக்குத் தேடிச்சென்றார். ஏற்கனவே வீடு திரும்பாத மூவர் குறித்து சம்பந்தப்பட்ட அயலவர் விசாரித்தபோது அவரும் உள்ளே கூட்டிச்செல்லப்பட்டார். அவர்கள் இராணுவத்தினரின் தங்கும் அறையின் பின்புறத்தில்கைகள் பின்புறமாகக்கட்டப்பட்ட நிலையில் வைக்கப்பட்டனர்.

மாணவி கிருசாந்தி வேறிடத்தில் வைக்கப்பட்டிருந்தாள். பின்னர் இரவு பத்து மணியளவில் கிருசாந்தி தவிர்ந்த மூவரும் கழுத்தில் கயிற்றால் நெரிக்கப்பட்டு கொலைசெய்யப்பட்டனர். அவர்களில் இருவர் ஒரு குழியிலும், மற்றொருவர் இன்னொருகுழியிலுமாகப் புதைக்கப்பட்டனர்.

பின்னர் நள்ளிரவு 12 மணியளவில் மாணவி கிருசாந்தியை பதினொரு பேர் வன்புணர்வு செய்து கொலைசெய்தனர்"

உதயன் (27.10.1996)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அடுத்தவாரம் தொடரும்)



# தொங்கு சபைகளும் எரிபொருள் வரிசை மக்களும்

நிலாந்தன்

கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் திருநெல்வேலிச் சந்தையில், இஞ்சி வாங்கினேன். ஒரு கிலோ 3000 ரூபா. ஏன் அவ்வளவு விலை என்று கேட்டேன். "இஸ்ரேலும் ஈரானும் மோதத் தொடங்கிவிட்டன. அதனால் விலையை ஏற்றிவிட்டார்கள்" என்று வியாபாரி சொன்னார். "மேற்காசியாவில் இருந்தா எங்களுக்கு இஞ்சி வருகிறது?" என்று கேட்டேன். "எங்கிருந்து வருகிறதோ தெரியாது. ஆனால் சண்டை தொடங்கியதால் விலை கூடிவிட்டது என்று மொத்த வியாபாரிகள் கூறுகிறார்கள்" என்று அவர் சொன்னார்.

அதே நாளில் யாழ்ப்பாணத்தில் எரிபொருள் நிரப்புநிலையங்களுக்கு முன் நீண்ட வரிசைகளில் மக்கள் காத்து நின்றார்கள். மேற்காசியாவில் போர் தொடங்கியதால் எரிபொருள் தட்டுப்பாடு வரலாம் என்ற ஊகம்; பயம்; தற்காப்பு உணர்வு போன்றவைகள் காரணமாக எரிபொருளை நிரப்புவதற்குச் சனங்கள் முண்டியடித்தார்கள். கடந்த திங்கட்கிழமை மட்டுமல்ல இதற்கு முன்னரும் மேற்கு ஆசியாவில் போர்ப்பதற்றம் ஏற்படும்போது யாழ்ப்பாணத்தின் எரிபொருள் நிரப்புநிலையங்களுக்கு முன்பாக இவ்வாறு நீண்ட வரிசைகளைக் காணமுடிந்தது. யாழ்ப்பாணத்தவரின் முன்னெச்சரிக்கை உணர்வும் ரத்தத்தில் ஊறிய சேமிப்புக் கலாசாரமும்தான் அதற்குக் காரணங்களா? முன்னெச்சரிக்கையாக இருப்பது நல்லது. ஒரு சமூகம் அவ்வாறு முன்னெச்சரிக்கையோடு சில விடயங்களை ஊகித்துஅந்த ஊகங்கள் பிழையாக இருந்தாலும் பரவாயில்லை தற்காப்பு உணர்வோடு சிந்திப்பது நல்லது. யாழ்ப்பாணத்தின் சேமிப்புக் கலாசாரம் என்பது தற்காப்பு உணர்வின் அடிப்படையானது. அரசற்ற ஒரு மக்கள் கூட்டம் தற்காப்பு உணர்வின் அடிப்படையில் சிந்திப்பது நல்லது.

ஆனால் இங்குள்ள கேள்வி என்னவென்றால், இவ்வளவு முன்னெச்சரிக்கை உணர்வுடைய; தற்காப்பு உணர்வுடைய ஒரு மக்கள்கூட்டம் தமது பிரதிநிதிகளைத் தெரியும் பொழுது எந்த அடிப்படையில் முடிவெடுக்கின்றது?

படித்த பெரும்பாலான யாழ்ப்பாணத்தவர்களைக் கேட்டால், கணிதம் விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளைத்தான் உயர்வான பாடங்கள் என்று கூறுவார்கள். ஆனால் தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும்பொழுது தமிழ் மக்கள் கணிதமாகவும் விஞ்ஞானபூர்வமாகவும் சிந்தித்து முடிவெடுக்கின்றார்களா?

லண்டனைச் சேர்ந்த ஒரு மருத்துவர் சில நாள்களுக்கு முன் முகநூலில் ஒரு குறிப்பை எழுதியிருந்தார். மேற்காசியாவில் நிகழும் போர் தொடர்பான காணொலிகளைப் பற்றிய குறிப்பு அது. "படிச்ச பெரிய மனிதர்கள் என்கிறார்கள். டொக்டர், எஞ்சினியர்கள் என்கிறார்கள். அதுகூடப் பரவாயில்லை, சொப்ட்வெயார் எஞ்சினியர் என்று புரொபைலில் போட்டு வச்சிருக்கானுகள். ஆனால் இப்படியான AIபடங்கள் (செயற்கை நுண்ணறிவின் மூலம் தயாரிக்கப்பட்ட படங்கள்) அதுவும் AI படங்கள் என்று இலகுவாக கண்டு பிடிக்கக்கூடிய படங்களையும், வீடியோக்களையும் பகிர்கிறார்கள்....என்னதான் படித்தாலும் பொதுப்புத்தி இல்லை. அடுத்தது தொழில்நுட்ப வளர்ச்சியை அறிந்து கொள்ளும் ஆர்வமில்லை."

அவர் கூறுவதுபோல தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் பொழுது தமிழ் மக்களில் எத்தனை பேர் பொதுப் புத்தியைப் பயன்படுத்துகின்றார்கள்? ஒரு பக்கம் கணித, விஞ்ஞான ஒழுக்கங்களைப் போற்றும் ஒரு சமூகம், பூகோள அரசியலில் நிகழும் மாற்றங்களை வைத்து தற்காப்பு உணர்வுடன் சிந்திக்கும் ஒரு சமூகம், ஆனால் உள்நாட்டில் தனது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் பொழுது அவ்வாறு அறிவுபூர்வமாக, தீர்க்கதரிசனமாகச் சிந்தித்து முடிவெடுக்கின்றதா?

கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளை எந்த அடிப்படையில் தெரிவுசெய்தார்கள்? கடந்த மாதம் நடுப்பகுதியளவில் மானிப்பாய் அந்தோணியார் கோவிலில் நடந்த ஒரு மக்கள் சந்திப்பில் இந்தக் கேள்வியை வளவாளர் அங்கு வந்திருந்தவர்களிடம் கேட்டார். பெரும்பாலானவர்கள் சொன்னார்கள், உள்ளூர் உணர்வுகளை மதித்து வாக்களித்ததாக. "எமது ஊரவர்; எமக்கு வேண்டியவர்; எமது இனசனம்; எமது சமயம்; எமது சாதி; எமக்கு உதவுபவர்"...போன்ற உள்ளூர் உணர்வுகளின் அடிப்படையில்தான் தமிழ்மக்கள் வாக்களித்திருக்கிறார்கள்.

அதேசமயம் கட்சிகள் தமது வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் பொழுது எந்த அடிப்படையில் அதைச் செய்தன? முக்கியமாக மூன்று அளவுகோல்கள் அங்கே இருந்தன. முதலாவது அளவுகோல், அவர் உள்ளூரில் வெல்லக்கூடியவராக இருக்கவேண்டும். இரண்டாவது அளவுகோல், அவர் கட்சித் தலைமைக்கு விசுவாசமானவராக இருக்கவேண்டும். கட்சித் தலைமையின் சொல் கேட்டு நடப்பவராக இருக்கவேண்டும். மூன்றாவது அளவுகோல் இது ஒரு விதத்தில் ஒரு சட்ட ஏற்பாடும் கூட ஒரு தொகுதி வேட்பாளர்கள் பெண்களாக இருக்கவேண்டும்.

இந்த மூன்று அளவுகோல்களிலும் எனது கட்டுரைகளில் நான் திரும்ப திரும்ப கூறுவதுபோல, கீழிருந்து மேல் நோக்கிய தேசியப் பண்புமிக்க உள்ளூர்த் தலைமைகளை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற கட்சிகடந்த தமிழ்த் தேசியத் தரிசனம் எத்தனை கட்சிகளிடம் இருந்தது?

வாக்களித்த மக்களும் தேசியப் பண்புமிக்க உள்ளூர்த் தலைமைகளைக் கட்டி எழுப்பவேண்டும் என்று கருதி வாக்களிக்கவில்லை. வேட்பாளர்களைத் தெரிவுசெய்த கட்சிகளும் கீழிருந்து மேல் நோக்கிய உள்ளூர்த் தலைமைகளைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற தரிசனத்தோடு அதைச் செய்யவில்லை. மிகக் குறைந்தளவு விதிவிலக்குகளைத்தவிர இப்போதுள்ள உள்ளூராட்சிசபை உறுப்பினர்களில் எத்தனை பேர் இந்தக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டதுபோலதமிழ்மக்களின் புத்திக்கூர்மையை; தற்காப்பு உணர்வை; எதிர்காலத்தை நோக்கிய முன்னெச்சரிக்கை உணர்வைப் பிரதிபலிக்கிறார்கள்?

அண்மைய நாள்களாக புதிய சபைகளை உருவாக்கும் விடயத்தில் தமிழ்க் கட்சிகளுக்கு இடையே நடக்கும் மோதல்களும் ரகசியப் பேரங்களும் ரகசிய வாக்கெடுப்புகளும் எதைக் காட்டுகின்றன ?அது தேசத்தைத் திரட்டும் அரசியலா? அல்லது கட்சி அரசியல் போட்டியா? மிகக்குறிப்பாக அவை தமிழரசுக் கட்சிக்குள் உள்ள முரண்பாடுகளைப் பிரதிபலிக்கின்றன. கட்சியின் மத்திய தலைமைக்கு விசுவாசமாக இருப்பதா? அல்லது தேசத் திரட்சிக்கு விசுவாசமாக இருப்பதா? என்ற கேள்வி எழும் பொழுது உள்ளூராட்சி சபை உறுப்பினர்களில் சிறு தொகையினர் தமது கட்சித் தலைமைக்கு விசுவாசமாக முடிவெடுக்க வில்லை. இந்த விடயத்தில் தமிழ்த் தேசியப் பேரவை தந்திரமாகக் காய்களை நகர்த்தி சில சபைகளைக் கைப்பற்றியிருக்கிறது. அதேசமயம் இந்த நகர்வுகள் தமிழ்த் தேசியப் பேரவைக்கும் சுமந்திரன் அணிக்கும் இடையிலான முரண்பாடு களை மேலும் ஆழமாக்கக் கூடியவை. சுமந்திரன் அணி எதிர்காலத்தில் பழிவாங்கும் உணர்வோடு சபைகளைக் கையாளும். அது பிரதேசசபைகளை நிர்வகிப்பதில் குழப்பங்களை ஏற்படுத்தக்கூடும். பிரதேசசபைகளை ஸ்திரமாக நிர்வகிப்பது சவால்களுக்கு உள்ளாகலாம். வென்ற கட்சிகளும் வெல்லாத கட்சிகளும் முகநூலில் மோதிக்கொள்ளும் காட்சிகளைப் பார்த்ததால் அப்படித்தான் சிந்திக்க வேண்டியுள்ளது. நாடு பிடிக்கப் புறப்பட்ட ஒரு மக்கள் கூட்டம் பிரதேச சபைகளைப் பிடிப்பதற்கு அடிபடும் காட்சி ரசிக்கத்தக்கதாக இல்லை.

தமிழ்க் கட்சிகளுக்கு இடையிலான பிடுங்குப்பாடு தனக்குச் சாதகமானது என்று தேசிய மக்கள் சக்தி நம்புகின்றது. தேசிய மக்கள் சக்தி தமிழ்ப் பகுதிகளில் இறுதி வாக்கெடுப்பின்போது நடுநிலை வகித்ததாகக் கூறுகிறது. ஆனால் அவர்கள் வாக்கெடுப்பில் நடுநிலைமை வகித்தமை என்பது தந்திரமானது. தனக்குத் தேவை என்று கருதிய சபையில், குறிப்பாக தையிட்டி விகாரை அமைந்திருக்கும் பிரதேசசபையில் தேசிய மக்கள் சக்தி ரகசிய வாக்கெடுப்பைக் கேட்டது.

மேலும், ஏனைய சபைகளில் வாக்கெடுப்பில் கலந்து கொண்டு அதில் குழப்பம் ஏற்பட்டால் தமிழ்க் கட்சிகள் அதை இனமுரண்பாட்டுக்கூடாகவியாக்கியானப்படுத்தும். மாறாக வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல்விட்டால் தமிழ்க் கட்சிகள் தாங்களே தங்களுக்குள் மோதி சபைகளைக் கொட்டிக் குலைக்கும். அதைவிட முக்கியமாக இதுவரை காலமும் யாரோடும் கூட்டுச்சேரமாட்டோம் என்று கூறி வந்தார்களோ அவர்களோடு கூட்டுச்சேர அல்லது அவர்களுடைய ஆதரவை மறைமுகமாகப் பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அவ்வாறு இதுவரை காலமும் தாங்கள் துரோகிகள் என்று பழித்தவர்களின் ஆதரவைக் கேட்கும் கட்சிகளை தமிழ் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தும் விதத்தில் அமைச்சர் சந்திரசேகர் கருத்துத் தெரிவித்துவருகிறார்.

ஒருபுறம் அரசாங்கம் தமிழ்க் கட்சிகளை குறிப்பாக தமிழரசுக் கட்சியை வாக்காளர்கள் மத்தியில் அம்பலப்படுத்தும் வேலையைச் செய்கிறது. இன்னொருபுறம் தமிழ்க் கட்சிகள் தங்களுக்கு இடையே மோதி உள்ளூராட்சி சபைகளை போட்டுடைக்கும்போது தமிழ்மக்கள் அக்கட்சிகளின் மீது வெறுப்படைந்து, சலிப்படைந்து தேசிய மக்கள் சக்தியை நோக்கித் திரும்புவார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நடந்ததுபோல். ஏன், உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்திதானே இரண்டாம் இடத்தில் நிற்கின்றது?

தேசிய மக்கள் சக்தி அப்படியொரு எதிர்பார்ப்போடு காத்திருக்கும் ஒரு பின்னணிக்குள் தமிழ்க் கட்சிகள் எல்லா விதமான முரண்பாடுகளுக்கும் அப்பால் உள்ளூராட்சி சபைகளில் தமிழ்த் தேசிய நிர்வாகத்தைப் பலப்படுத்துவது என்ற அடிப்படையில் முடிவெடுத்தால் மட்டும்தான் உள்ளூர்ப் பொருளாதாரத்தை தமிழ்த் தேசியப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாகக் கட்டி எழுப்பலாம்; உள்ளூர்த் தலைமைகளை தேசியப் பண்புமிக்கவர்களாக வார்த்து எடுக்கலாம். இல்லையென்றால் முன்னாள் மாகாண சபை உறுப்பினரான, மறைந்த பசுபதிப்பிள்ளை ஒரு முறை மாகாணசபையில் கூறியதுபோல "நந்தவனத்து ஆண்டிகள் போட்டுடைத்த தோண்டிகளாக" உள்ளூராட்சி சபைகள் மாறக்கூடுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசவத்துக்குப் பிற்பட்ட மனச்சோர்வு



## தாய்மையின் பின்னால் மறைந்த மனவலி

இராசையா கீதா
(மாணவி
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.)

ஒரு பெண் தாயாகும் தருணம் அந்தப் பெண்ணின் வாழ்க்கையில் மிகச் சிறப்பான ஒன்று. குழந்தையின் முதல் சிரிப்பும், தொடுதலும் தாயின் மனதை ஆழமாகத் தொடும். ஆனாலும், பிரசவத்தின்போது ஏற்படும் பல அனுபவங்கள் தாயின் உளநலத்துக்குச் சில சமயங்களில் தீங்கு செய்துவிடுகின்றன. இதன் தீவிர நிலையாக சில தாய்மார்களுக்கு குழப்பமான, மாறுபட்ட மனநிலை ஏற்படுகின்றது. இதனையே உள்ளூர் வழக்கில் 'சன்னி சுவாதம்' எனக் கூறுகின்றனர். ஒரு பிரசவத்தை தொடர்ந்து வரும் ஓரிரு நாட்களில் கிட்டத்தட்ட 50 சதவீதமான தாய்மார்களுக்கு ஒரு தற்காலிகமான மனக்குழப்பம் ஏற்படக் கூடும். ஆயினும் இந்தக் குழப்பமான மனநிலையானது ஒரு கிழமை அல்லது பத்து நாள்களுக்குள் மெல்ல மறைந்துவிடுகின்றது. இதனை பிரசவத்திற்கு பின்னரான தற்காலிக கவலை (postpartum blues) எனக் கூறுவர்.

ஒரு பிரசவத்தைத் தொடந்து குழப்பமான மனநிலையின் அறிகுறிகள் 3 தொடக்கம் 6 மாதங்கள் வரை நீடிக்குமானால் இந்த நிலைமையே பிரசவத்துக்குப் பிற்பட்ட மனச்சோர்வு (Postpartum Depression PPD) என அழைக்கப்படுகிறது. உலக சுகாதார நிறுவனம் (WHO, 2022) உலகளவில் 10 முதல் 15 சதவீதமான பெண்கள் PPDயால் பாதிக்கப்படுகிறார்கள் எனக் கூறுகிறது. எனவே இந்த மன நிலைப் பிரச்சினை குறித்து பேசுவதும் புரிந்துகொள்வதும் அவசியமாகிறது.

பிரசவத்துக்குப் பிற்பட்ட மனச்சோர்வினால் பாதிக்கப்பட்ட தாய் வெளிப்படுத்தும் அறிகுறிகள் பல விதமாகக் காணப்படும். அதில் உணர்வு சார்ந்த அறிகுறிகளாக எதிர்மறை எண்ணங்கள் ஏற்படலாம். "நான் ஒரு நல்ல தாயில்லை" என்ற குற்ற உணர்வு, தொடர்ச்சியான சோகம், கவலை அல்லது "வெற்று" மனநிலை, கோபம், ஏமாற்றம், தற்கொலை எண்ணங்கள் "எனக்கு வாழ்க்கை தேவை இல்லை" என்ற எண்ணம் தன்னை அல்லது குழந்தையைப் பாதிக்கச் செய்யும் எண்ணங்கள், எரிச்சல், ஓய்வின்மை நம்பிக்கையற்று இருத்தல், உதவியற்று இருத்தல், குற்றவுணர்வு, வெட்கம், மதிப்பின்மையாக கருதுதல், தாழ்வான சுயமதிப்பு, உணர்வின்மை, வெறுமை, இயல்பாக இருக்கமுடியாமை, குழந்தையுடன் பிணைப்பின்மை, தேவைக்குக் குறைவாக குழந்தையின் மீது அக்கறை செலுத்துதல் போன்றன காணப்படுகின்றன.

நடத்தை சார்ந்த அறிகுறிகளும் உண்டாகலாம். அன்றாட நடவடிக்கைகளில் மகிழ்ச்சியும் ஆர்வமும் இல்லாமை, அழுகை, மூச்சுத்திணறல், தலைவலி, உடல் வலி, ஆற்றல் குறைவு அல்லது இல்லாமை, இன்பத்தில் நாட்டமின்மை, பசியின்மை, களைப்பு, பலவீனம், ஊக்கமின்மை, சுயநலனில் அக்கறை இன்மை, குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் குழந்தையிடமிருந்தும் விலகல் பொதுவான பொறுப்புகளில் ஈடுபடாமை, குழந்தை பராமரிப்பு, வீட்டு வேலை, வேலைக்குச் செல்வது போன்றவற்றில் ஆர்வக் குறைவு தனித்திருத்தல், தூக்கமின்மை அல்லது அளவற்ற தூக்கம், குழந்தையை கடுமையாகத் தாக்குதல், சில சமயங்களில் குழந்தையை கொலைசெய்யும் அளவிற்கும் செல்லுதல் போன்ற அறிகுறிகளை வெளிப்படுத்துவார்கள்.

அறிவு சார்ந்த அறிகுறிகளும் இந்தச் சந்தர்ப்பங்களில் வெளிப்படலாம். தெளிவற்ற சிந்தனை, முடிவெடுப்பதில் குழப்பம், கவனக்குறைவு, ஞாபக மறதி, குழந்தையைப் பற்றிய பயம், தன்னைப் பற்றிய, குழந்தையைப் பற்றியம் கணவரைப் பற்றிய கவ்லைகள் போன்றன இந்த வகைக்குள் வரும்.

ஒரு தாய்க்கு பிரசவத்துக்குப் பிற்பட்ட மனச்சோர்வை ஏற்படுத்தும் காரணிகள் பல உள்ளன.

**உயிரியல் காரணிகள்:**
ஹார்மோன்கள் (ஈஸ்ட்ரஜன், புரொஜெஸ்டெரோன்) பிரசவத்திற்கு பின் திடீரெனக் குறைவதால் இரத்தஅழுத்தம், நீரிழிவு, நோய் எதிர்ப்பு குறைபாடு போன்ற உடல்நலக் காரணிகள்

**உளவியல் காரணிகள்:**
தாயாகும் பொறுப்புக்கேற்ப தன்னைத் தயார்படுத்திகொள்ளாத மனநிலை பிரசவத்தின்போது ஏற்பட்ட நெருக்கீடுகள் முன்பிருந்த மனநலப் பிரச்சினைகள், குறைந்த தூக்கம், தனிமை என்பன.

**சமூகக் காரணிகள்**
கணவன், குடும்ப ஆதரவு இல்லாமை, பொருளாதார அழுத்தங்கள் "நல்ல தாய்" பற்றிய சமூக எதிர்பார்ப்பு, ஒப்பீடு செய்தல் போன்ற பல காரணிகள் பிரசவத்திற்கு பிற்பட்ட மனச்சோர்வுவை ஏற்படுத்துகின்றன.

பிரசவத்துக்குப் பின்னான உளப்பாதிப்புகளால் பெண்ணின் வாழ்வில் ஏற்படும் பாதிப்புகள் பற்றி நோக்குகையில் உளநலப்பாதிப்புகளால் ஒரு பெண், தாய் என்கின்ற தனது பாகத்தைச் சரிவர நிறைவேற்றமுடியாது போகலாம். இதனால் தாய், சேய் என்ற பிணைப்பு (bondign) இல்லாமல் போதல். அல்லது அதில் குறைபாடு ஏற்படுதல். குழந்தை தாய்ப்பால் இல்லாது வளரும் நிலை ஏற்படலாம்,.தாயன்பு கிடைக்காத அநாதரவான சூழலில் வளரும் குழந்தை நாளடைவில் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படலாம். மொழி, அறிவாற்றல், சமூகத் திறன் வளர்ச்சியில் தாமதம் இவ்வாறான நிலைமைகள் எதிர்காலத்தில் குழந்தைக்கு உளநலப் பிரச்சினைக்கு உள்ளாக வழிவகுக்கலாம். அத்தோடு பெண்களின் திருமண வாழ்விலும் குழப்பம் ஏற்படலாம். கணவனின் அன்பும், அக்கறையும், கவனிப்பும் கிடைக்காமல் போகலாம், பாலியல் செயற்பாடுகளில் பெண்கள் ஆர்வம் குறைவடையலாம் இதனால் பாலியல் ரீதியான திருப்தியின்மையினால் சில கணவன்மார் முரண்படலாம், கணவனுடைய குடும்பத்தவருடனான உறவுகளில் விரிசல், குடும்பம் பிளவுபடலுக்கான சந்தர்ப்பம் அதிகரிக்கலாம், தற்கொலை எண்ணங்கள் மற்றும் சில நேரங்களில் முயற்சிகள், குழந்தையின் கல்வி மற்றும் தன்மையில் பின்தங்குதல், பள்ளிப்படிப்பில் கவனம் குறைதல், சமூக உறவுகளில் சிக்கல், பிரசவத்திற்குப் பிற்பட்ட மனச்சோர்வு சிகிச்சை இல்லாமல் விடப்பட்டால், அது மிகவும் நீடிக்கும் தீவிர மன அழுத்தமாக (chrnoic depression) மாறலாம். இதனால் உளநோயாளி என முத்திரை குத்தப்பட்டு நிரந்தரமாக இழிவுபடுத்தப்படலாம், அல்லது ஒதுக்கப்படலாம். எனவே ஒரு தாய் பிரசவத்துக்குப் பிற்பட்ட மனச்சோர்வு நிலைக்கு உள்ளாகாமல் தடுப்பது மிக அவசியமானது.

பிரசவத்துக்குப் பிற்பட்ட மனச்சோர்வினால் ஒரு தாய் பாதிக்கப்பட்டு இருக்கும்போது அதிலிருந்த அவளை மீண்டெடுப்பதற்கான வழிமுறைகள் சில காணப்படுகின்றன. பிரசவம் ஒரு கடினமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்ற அனுபவம் இதன்போது கணவனிடமிருந்தோ தாயிடமிருந்தோ அல்லது ஏனைய உறவுகளிடமிருந்தோ பெறப்படும் ஆதரவு அவசியமான ஒன்றாகும். பிரசவத்தின்போது அதற்கு முன்னும் பின்னும் தாயுடன் ஆதரவாகவும் கரிசனையுடனும் நடந்து கொள்வது. என்ன நடக்கிறது? என்ன நடக்கப்போகின்றது? என்ற விதமான தகவல்களை கொடுத்தலும் தேவையானது. பொதுவாக பிரசவத்தைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய உளநலப் பாதிப்புகள் நிரந்தரமானவை அல்ல தற்காலிகமானதே என்பதை அறியச் செய்தல், பிரசவ நேரத்திலும், பின் குழந்தை பராமரிப்பிலும் கணவனின் பங்கை, பொறுப்பை அதிகரிக்கும் வழிவகைகளை ஆராய்வது என்பன முக்கியமானவை. மேலும் உளவளத்துணை (counselign) ஊடாக குடும்ப ஆலோசனை தம்பதியருக்கான ஆலோசனை வழங்கல் Congitive Behavioral Therapy (CBT) தீய எண்ணங்களை மாற்ற உதவும் சிகிச்சை முறை என்பவற்றோடு அடிக்கடி மனநிலையும் பரிசோதனை செய்யப்படவேண்டும். இதற்கு EPDS (Edilnpurgh Postnatal Depression Scale) போன்ற கருவிகள் வழியாக மன நிலையினை அறிந்து கொள்ளமுடியும்.

ஒரு தாய் தீவிர மனச்சோர்வுக்கு உள்ளாகும்போது மனநல மருத்துவரின் ஆலோசனையுடன் நுணுக்கமாக மருந்துகள் அளிக்கப்படவேண்டும். பால் ஊட்டும் தாய்களுக்கு ஏற்ற மருந்துகள் தேர்வு செய்யப்படவேண்டும். பிரசவத்துக்குப் பின்னரும் புதிய தாயாருக்கு தனிப்பட்ட மருத்துவ கவனம் தேவை. உடல் ஆரோக்கியம் சரியான நிலையில் உள்ளதா என்பதையும் பரிசோதிக்க வேண்டும். (உதாரணம்: ஹார்மோன் மாற்றங்கள், இரத்தசோகை), மற்றத் தாய்மார்களுடன் அனுபவங்களை பகிர்வதன் மூலம், தனிமை உணர்வைக் குறைக்கலாம். சமூக ஊடகம், சமூக நிறுவனங்கள் வழியாக உருவாக்கப்படும் தாய்மார் ஆதரவுக் குழுக்கள் போன்றவற்றின் மூலமும் அந்நிலையில் இருந்து மீண்டு வர உதவ முடியும். இலங்கையில் 1333 என்பது CCClien எனப்படும் ஒரு இலவசமான, ரகசியமான தொலைபேசி ஆலோசனைச் சேவையாகும். இந்த சேவை, மனநலப் பிரச்சினைகள், தனிமை, கவலை, மனச்சோர்வு, தற்கொலை எண்ணங்கள் போன்றவற்றால் பாதிக்கப்படும் நபர்களுக்கு உடனடி உளவியல் ஆதரவை வழங்குகிறது. இவ்வாரான வழிமுறைகள் ஊடாக பிரசவத்துக்கு பிற்பட்ட மனச்சோர்வினால் பாதிக்கபட்ட தாய்மார்களை மீட்டெடுக்க முடியும்.

பிரசவத்துக்கு பிற்பட்ட மனச்சோர்வு ஏற்படாமல் தடுப்பதற்கு கர்ப்பகாலத்திலேயே மனச்சோர்வுக்கான அறிகுறிகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும், " counselign" (கர்ப்பகால ஆலோசனை) மூலமாக எதிர்பார்ப்புகள் மற்றும் உணர்வுகளை சமாளிக்க கற்றல், கணவர், குடும்பத்தினர், நண்பர்கள் தாயுணர்ச்சிக்கு ஆதரவு வழங்ககுதல், வீட்டு வேலைகளில் பங்கு கொண்டு சுமைகளை குறைப்பது தொடர்பான விடயங்களில் தெளிவுத் தன்மையை ஏற்படுத்துதல். மற்றும் குழந்தை தூங்கும் நேரத்தில் தாயும் ஓய்வெடுத்தல் என்பன முக்கியமானவை. . தூக்கமின்மை மனநலத்தைக் கடுமையாக பாதிக்கக்கூடிய காரணியாக இருக்கிறது. அத்தோடு மன அமைதிக்கு உதவும் செயல்களான உடல் பயிற்சி யோகா, நடைப்பயிற்சி, இசையை இரசித்தல், ஆரோக்கியமான உணவுமுறைகள் போன்றன பிரசவத்துக்குப் பிற்பட்ட மனச்சோர்வு ஏற்படுவதை குறைக்க உதவும் வழிமுறைகளாகக் காணப்படுகின்றன.

பிரசவத்துக்குப் பிற்பட்ட மனச்சோர்வு என்பது சாதாரணமாகத் தோன்றலாம், ஆனால் அது ஒரு தாயின் முழுமையான வாழ்க்கையைக் கேள்விக்குள்ளாக்கக்கூடிய ஆழமான உளவியல் நிலை. இந்த நிலை குற்றமல்ல, பலவீனமல்ல அது சிகிச்சைக்குரிய ஒரு நிஜமான பிரச்சினை. அதனை உரிய காலத்திலே அடையாளம் காண்பதும், மனநல ஆலோசனை வழங்குவதும், குடும்பமும் சமுதாயமும் தாய்க்கு துணைநிற்பதுவும் அவசியம். தாயின் நலமே குழந்தையின் நலத்துக்கு அடித்தளம். ஒரு புதிய உயிர் பிறக்கும்போது, அதனை உருவாக்கிய உயிரான தாயும் கவனிக்கப்படவேண்டும். ஒவ்வொரு தாயும் மனநலத்துடன் வாழும் உரிமை கொண்டவர், அந்த உரிமையை பாதுகாப்பது நம் ஒவ்வொருவரது பொறுப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்.முபாறக்

# அறிந்தும் அறியாமலும்

## வந்தது 'ஏஸி' பஸ்ஸில்; போனதோ ஓட்டோவில்!

கொழும்பு மாநகரசபையில் ஆட்சி அமைப்பதற்கான இழுபறிப்போராட்டம் ஒருமாதிரி முடிவுக்கு வந்துவிட்டது. கடைசி வரை யார் பக்கம் ஆட்சி போகும் என்ற கேள்விக்கு விடைகிடைத்துவிட்டது. பெரும்பாலானோர் கணித்ததைப் போன்று அரச தரப்பே வெற்றிபெற்றுள்ளது.

உண்மையில் எதிர்க்கட்சிகளின் பக்கம்தான் ஆரம்பத்தில் காற்று அடித்தது. அவர்கள் பக்கத்தில் 62 உறுப்பினர்கள் இருந்தார்கள். இதனால் அவர்கள் ஆட்சி அமைப்பது உறுதி என்ற சந்தோஷத்தில் இருந்தார்கள். அதனால் அவர்களின் எல்லா உறுப்பினர்களையும் ஒரு பஸ்ஸில் ஏற்றி சபைக்குக் கொண்டுவந்தார்கள். அது சாதாரண பஸ் அல்ல. குளிரூட்டப்பட்ட, அதிசொகுசு பஸ். அப்படி பஸ்ஸில் படோபடமாக வந்தவர்கள் வாக்கெடுப்பில் தோற்றுப்போனார்கள்.

அவ்வளவுதான்...

அத்தோடு அவர்களை ஏற்றி வந்த பஸ்ஸையும் காணவில்லை. ஏற்றிவந்தவர்களையும் காணவில்லை. காத்திருந்து காத்திருந்து களைத்துப்போய் கடைசியாக ஒவ்வொருவரும் தங்கள் கைக்காசில் ஓட்டோவைப் பிடித்துத்தான் வீடு சென்றார்களாம்.



## ரணிலும் ரவுடிதான்!

ரணில் விக்கிரமசிங்க அண்மையில் சிங்கப்பூருக்கு மருத்துவத் தேவையின் நிமித்தம் சென்றிருந்தார்.

பதவி போன பிறகும் தனக்கு சர்வதேசத் தொடர்புகள் உள்ளன என்று காட்டிவரும் ரணில், சிங்கப்பூரிலும் அந்த வேலையைக் காட்டுவதற்கு முற்பட்டுள்ளார். தனக்குத் தெரிந்தவர்கள் மூலமாக சிங்கப்பூரின் முன்னாள் பிரதமரை சந்திக்க முற்பட்டார்.

ஆனால் முன் அனுமதியில்லாமல் அவரை இப்போதைக்குச் சந்திக்கமுடியாது என்று சீன அதிகாரிகள் முகத்தில் அடித்தாற்போல சொல்லி, அனுமதி மறுத்துவிட்டனர்.

பாவம் ரணில். அண்மைக்காலத்தில் இப்படி பல சந்திப்புகள் அவருக்கு மறுக்கப்பட்டிருக்காம். ஆனாலும் அதையெல்லாம் அவர் பொருட்படுத்தாமல் 'நானும் ரவுடிதான், எனக்கும் சர்வதேசத் தொடர்பு இருக்குத்தான்' என்று படம் காட்டும் வேலையைமட்டும் விடாமல் தொடர்கிறாராம்.



## யார் அந்த ஒற்றன்?

கொழும்பு மாநகரசபையில் எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பு ஆட்சி அமைப்பது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சில நாள்களுக்கு முன் எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் வண்ணாத்திப் பூச்சி சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சைக் குழு உறுப்பினர்களைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

பேச்சு முடிந்து சஜித் வெளியே வரும்போது அவரது கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பு ஒன்று வந்தது.

அழைப்பு எடுத்தவர் கொழும்பு மாநகரசபையில் திசைகாட்டியினர் ஆட்சி அமைப்பதற்காக வேலை செய்துகொண்டிருக்கும் ஒருவர்.

அழைப்பு எடுத்தவர் "ஆ..பேச்சு எ னமாதிரி ..என்ன ரிசல்ட்..?" என்று கேட்ட ்..

அவர் அப்படிக் கேட்டதும் சஜித்து கு தூக்கி வாரிப்போட்டது.

இது எப்படி இவருக்குத் தெரியும்? தற்குள் இங்கிருந்து தகவல் கொடுத்தது ?

மீண்டும் அலுவலகத்துக்கு உள் சென்று அந்த ஒற்றனைத் தேடத் தொட யுள்ளாராம் சஜித். ஆனால் பிடிபடவில் ல. விரைவில் அந்த ஒற்றனைப் பிடித்தே தீ வண்டும் என்று வெறிகொண்டலைகிறரா சஜித்.



## சஜித்தைக் காணோம்

கடந்த வாரம் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்குக் கடும் சுகவீனம். சில நாள்கள் வீட்டிலேயே தங்கி ஓய்வெடுக்க முடிவெடுத்தார். வீட்டுக்கும் யாரையும் வரவழைப்பதில்லை. யாருடைய தொலைபேசி அழைப்புகளுக்கும் பதில் வழங்குவதுமில்லை. பூரண ஓய்வில் இருக்கவேண்டும் என்று முடிவெடுத்தார் சஜித்.

ரஞ்ஜித் மதுமபண்டார மற்றும் திஸ்ஸ அத்தநாயக்க ஆகிய இருவருடன் மாத்திரம் தொலைபேசித் தொடர்புகளை மேற்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றும் வேலையை செய்துகொண்டே இருந்தாராம் சஜித்.

உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியைப் பிடிப்பதற்காக சஜித் தரப்பு முயற்சி செய்துகொண்டிருக்கும் இந்த நிலையில் தங்களின் தலைவர் திடீரெனக் காணாமற்போனமை சிலருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. ஒருவேளை, அரச ஆட்சி அமைப்பதற்கு இடம்கொடுத்துவிட்டு சஜித் ஒதுங்கி இருக்கிறாரோ என்று அவரது கட்சிக்குள்ளேயே கிசுகிசுக்கப்பட்டது. நல்லவேளையாக அவரது கட்சியினர் 'சஜித்தைக் காணவில்லை' என்று பொலிஸில் முறைப்பாடு கொடுக்காமல் விட்டார்களே என்றளவில் சஜித் சந்தோ

## மத்தள அமைச்சர்கள்

திசைகாட்டி அரசாங்கத்தின் அமைச்சர்கள் சிலர் பெரும் அதிருப்தியில் உள்ளார்களாம்.

அதற்குக் காரணம் அவர்களின் வருமானத்துக்கு வீழ்ந்த அடிதானாம். அதிகமான அமைச்சர்கள் சட்டத்தரணிகள், மருத்துவர்கள், பேராசிரியர்கள் என்று மதிப்பும் வருமானமும் மிக்க பணிகளில் இருந்தவர்கள்.

அவர்கள் அந்தத் தொழில்களின் மூலம் ஈட்டிய வருமானம் மாதம் ஒன்றுக்கு 5 லட்சம் ரூபா முதல் 10 இலட்சம் ரூபா வரையாம். இப்போது இந்த அமைச்சுப் பதவிகளில் அவர்களுக்கு கிடைக்கின்ற சம்பளம் 80 ஆயிரம் ரூபா மட்டுமே. இதனால் முன்பு தம் இஷ்டப்படி பணத்தைப் பார்த்துப்பாராமல் செலவழித்தவர்கள் இப்போது அதைச் செய்யமுடியாமல் கைகட்டப்பட்டவர்கள் போல் உள்ளனராம். இப்படி தங்கள் வருமானம் பலமடங்காகக் குறைந்ததால் அவர்களின் குடும்பத்திலும் கடும் புகைச்சலாம்.

இப்போது அமைச்சுப் பதவியையும் விடமுடியாமல், குடும்பத்தினரின் அழுத்தங்களையும் தாங்கமுடியாமல் மத்தளம் போல 'ரண்டு பக்கமும் அடி வாங்கிக் கொண்டே' இருக்கிறார்கள்.

ஐயோ பாவம் அமைச்சர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி

## ஆடம்பரமில்லை, அத்தியாவசியம்



ஜூன் 21 காணிதினம். அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

○ பவித் அருள்வசந்த்

உங்களிடம் உங்களுக்கு என்று சொந்தக் காணி இருக்கிறதா?

ஆம், என்றால் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள்தான். ஆனால் ஏன் அந்த அதிர்ஷ்டம் மலையக மக்களுக்கும், வடக்கு மக்களுக்கும் கிட்டவில்லை என்பது கேள்விக்குறிதான்.

உணவு, உடை, உறையுள் என்ற அத்தியாவசியத் தேவைகளுள் உறையுள் எனும் நிலம் மனிதர்களின் அடிப்படைத் தேவையாகும். காணி தினம் ஒரு கொண்டாட்டம் அல்ல மாறாக உணர்வுடன் உரிமைக்குரல் எழுப்பவேண்டிய நாளாகும். காணியிருப்பவர்கள் எப்போதும் காணி தினம் என கொண்டாடுவது இல்லை. கொண்டாடவேண்டிய அவசியமும் இல்லை. காணி இல்லாதவர்களே காணி தினத்தை உரிமைக்காக, நிலங்களுக்காக, வாழ்வாதாரத்துக்காக, வரலாற்றுக்காக உணர்வுடனும் விழிப்புணர்வுடனும் அனுட்டிக்கிறார்கள் என்பது நிதர்சனம்.

இலங்கையின் வட பகுதியில் இராணுவ முகாம்களின் தோற்றம் வடக்கில் பொது மக்களின் நிலங்களை விழுங்கிவிட்டன. இன்றுவரை நிலத்துக்காக எத்தனையோ போராட்டங்கள் "எமது நிலம் எமக்கு வேண்டும்" எனும் கோஷத்துடன் இடம் பெற்ற வண்ணம்தான் இருக்கின்றன. ஆனால் இதற்கான தீர்வு என்பது பொது மக்களுக்கு எட்டாக்கனிதான். வெடுக்குநாறிமலை, குருந்தூர் மலை, மயிலத்தமடு, தையிட்டியென எமது காணியை கூட நமக்குத் தருவதில் எத்தனையோ அரசியல் சித்துவிளையாட்டுகள் நடக்கத்தான் செய்கின்றன. இது ஒரு பக்கம் என்றால் மலையக மக்களின் துன்பம் இன்னொரு பக்கமாகும். இன்றும் தமக்கென சொந்த வீடோ, காணியோ இல்லாத மக்களாக வாழ்ந்துவருகின்றனர்.

மலையகம் மக்களின் வாழ்வியல் 200 வருடங்களைக் கடந்துவிட்டாலும் அவர்களின் துன்பியல் இன்னமும் குறையவில்லை. ஒரு சொந்தக்காணி இல்லாமல் முதலாளிமாரின் காணிகளில் தம்மால் முடிந்தளவுக்கு குடிசைகளையும், கல் வீடுகளையும் அமைத்து வாழ்கின்றனர். அவர்கள் எத்தனை துன்பங்களைத்தான் சுமப்பது நாட்டின் பொருளாதாரத்தை பெருக்கும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏன் இன்னமும் சொந்தக் காணியும், சொந்த வீடுகளும் இல்லை. காணி என்பது ஆடம்பரம் அல்ல. அத்தியாவசியம் என்பதை அரசாங்கமும், சில அரசியல்வாதிகளும் புரிந்துகொண்டால் அப்பாவி மக்கள் நிலம் அற்றவர்களாக இருக்கத் தேவையில்லையே.



> காணி என்பது ஆடம்பரம் அல்ல, அத்தியாவசியம் என்பதை அரசாங்கமும், சில அரசியல்வாதிகளும் புரிந்துகொண்டால் அப்பாவி மக்கள் நிலம் அற்றவர்களாக இருக்க தேவையில்லையே.

# உளர்ப்தினம்

பாகம் 3

○ இராகவன்

சுந்தரராமசாமியின், "ஜே.ஜே .சில குறிப்புகள்" என்ற புதினத்தைத் தான் முதல்ல வாசிச்சன். அதுக்குப் பிறகுதான் குலசிங்கத்திட்டயிருந்து. "குழந்தைகள் பெண்கள் ஆண்கள்" கிடைச்சு வாசிச்சன். பிறகு கட்டைவேலி நெல்லியடி யூனியன் லைப்பிறரியிலயிருந்து "புளியமரத்தின் கதை" எடுத்துவாசிச்சன். "ஜே.ஜே. சிலகுறிப்புகள்" எனக்கு நண்பன் ஆதி மூலமாக் கிடைச்சுது. அதை வாசிக்கேக்குள்ள கதைக்கும் உண்மைக்கும் வித்தியாசந் தெரியாததொரு நிலையிலயிருந்துதான் வாசிச்சன். கடைசிப்பக்கத்தில "ஜே.ஜே. எழுதிய நூல்கள்" எண்ட தலைப்பில் இரண்டு மூண்டு புத்தகங்களின்ரை பெயர் போட்டிருந்தது. இதைப் பற்றிக் குப்பிழான் ஐ.சண்முகனோட கதைக்கேக்குள்ள அவர் சொன்னார், "ஜே.ஜே. சில குறிப்புகளை வாசிச்சிட்டு சிலர் புத்தகக் கடையளில போய் அந்தப் புத்தகங்களின்ரை பெயர்களைச் சொல்லி விற்பனைக்கு வந்திருக்கோ? எண்டும் கேட்டவையாம்" எண்டு அந்தளவுக்குச் சுந்தரராமசாமி வெகு இயல்பாக அதை எழுதியிருக்கிறார்.

"புளியமரத்தின் கதை" தான் சுந்தரராமசாமியின் முதலாவது புதினம். அதை வாசிக்கிறது இன்னொரு வகையான அனுபவம். அதிலை யாழ்ப்பாணத்துப் புகையிலையைப் பற்றியும் சுந்தரராமசாமி சிலாகித்து எழுதியிருப்பார். அது இப்பவும் எனக்கு ஞாபகத்திலயிருக்குது. குப்பிழான் ஐ.சண்முகனும் புனிதவதி ரீச்சரும் கொஞ்சக்காலம் தமிழகத்தில இருந்தவை. அந்தக்காலத்தில அவையள் இரண்டு பேரும் சுந்தரராமசாமி வீட்டிலயும் தங்கியிருக்கினம். அது ஓர் அலாதியான அனுபவம் எண்டு சண்முகன் என்னிட்டச் சொல்லியிருக்கிறார்.

ஒருமுறை சுந்தரராமசாமி தனது வேட்டியை சண்முகனுக்குக் கட்டக் குடுத்திருக்கிறார். சண்முகனும் அதைக் கட்டிவிட்டு தோய்த்துப்போட்டுவிட்டு மறுநாள் அவசரமாக அங்கிருந்து வெளிக்கிட வேண்டியிருந்த நிலையில் சுந்தரராமசாமியிடம் நன்றி தெரிவித்து ஒரு வார்த்தை சொல்லச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவரை அவமதித்து விட்டு வந்ததைப்போல் இன்றைக்கும் உணர்வதாகச் சண்முகன் என்னிட்டச் சொல்லியிருக்கிறார்.


34

புனிதவதி ரீச்சர் சுந்தரராமசாமியின் ஆகிருதியான தோற்றப்பொலிவைப் பற்றி எப்போதுமே விதந்துரைப்பார். சுந்தரராமசாமியின் ஒரு மகளின் பெயர் தங்கு. அவரைச் சுந்தரராமசாமி எப்போதும் "என் ஆசைத் தங்கு" என்றழைப்பதாகவும் புனிதவதி ரீச்சர் சொல்வார். குலசிங்கம் தனது வீட்டில் "அறிவோர் கூடல்" என்ற பெயரில் ஒரு கலை இலக்கியக் கலந்துரையாடல் நிகழ்வை நடத்திவந்ததைப் போல சுந்தரராமசாமியும் தனது வீட்டில் "காகங்கள்" என்ற பெயரில் ஒரு கலை இலக்கியக் கலந்துரையாடல் நிகழ்வை நடத்தி வந்ததாகச் சண்முகன், குலசிங்கம் முதற்கொண்டு பலரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். பின்னர் இதைப் பற்றி வாசித்துமிருக்கிறேன்.

ம்...... சரி இப்ப விசயத்துக்கு வருவம். குலசிங்கம் வாசிக்கிற ஆர்வத்தோட ஆர் வந்து கேட்டாலும் கேக்கிற புத்தகத்தை உடனே எடுத்துக்குடுத்திடுவார். ஆனால் மற்றாக்களிட்டப் புத்தகமெடுக்கிறதுக்கும் அவரிட்ட எடுக்கிறதுக்கும் பெரிய வித்தியாசமிருக்கு. குலசிங்கம் ஒரு புத்தகத்தை ஒராளுக்கு வாசிக்கக் குடுக்கேக்குள்ள இந்தப் புத்தகத்தின்ர மகத்துவத்தைச் சொல்லிப்போட்டு ஒரு பதிவேட்டை எடுத்து புத்தகமெடுக்கிறவரிட்டக் குடுத்துப் பதிவிச்சுக் கையெழுத்தும் வாங்கிப்போட்டுத்தான் குடுப்பார். இதுபுத்தகமெடுக்கிறவருக்கு வாசிக்கிற தூண்டுதலையும் திருப்பிக் குடுக்கோணுமெண்ட பொறுப்பையும் ஏற்படுத்தும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்கவி

## போரின் கவிதை 17

இரவும் பகலும் ஒரே பொழுதுகளாக
யாருமில்லாத் தனிமை
ஒளித்து ஒதுங்கிப் போரிட்டேன்.
இறுதி முடிவு எட்டுகிறது
தாயின் நினைவு முட்டுகிறது
நெஞ்சடைக்கும் சோகம்
நினைக்காத தோல்வி
சமாளிக்க இயலாமல் தவித்தேன்.

கூட்டமாக நின்றவர்
இரண்டாகக் குறைந்து...
ஒற்றையாக நின்று
இடம்மாற இயலாமல்
போரிடும் நிர்ப்பந்தம்..
பசி வயிற்றைக் கிழிக்கிறது
மாதவிடாய்த் துணி
மாற்றமுடியவில்லை..
காயத்தின் இரத்தமும் அதுவும் ஒன்றாகி
ஓடிக்கொண்டிருந்தன...

சமைப்பவர்கள் துண்டங்களாகினர்
சோற்றுக்கான பசி தாங்கமுடியவில்லை
தலைசுற்றி..நரம்புகள் தண்ணீர் கேட்டன..
ஆறுதல் இல்லாத் தனிப்பெண்ணாக
போரிடும் நிலை..
பின்வாங்கினால்.. எங்குபோவது ?
முன்வாங்கினால் பிடித்துவிடுவார்கள்..
மாதவிடாய் வலி நெருப்பெனக் கொதித்தது
பலநாட்கள் மாற்றாத துணி..
மாற்றம் கேட்டது....

அப்பாவின் நினைவுகள் ..
கண்ணீரை நனைத்தன....
அம்மா எனை நினைத்து அழுவாளே?
துக்கித் திரிந்து துயரங்கள் களைந்து
செல்லமகளாக வளர்த்தவள்..
எங்கே! இருப்பாளோ மடிந்தாளோ?
குட்டித் தம்பியின் குதூகலித்த முகம்
அக்கா என வட்டமிடும் அழகிய தங்கை
நெஞ்சை முட்டுகிறது..
இறப்பின் முடிவுதானோ?
இதுவரை நினைக்காத பொழுதுகள்..
அவர்களை நினைவூட்டுகிறது..

நஞ்சுக்குப்பியை கடிப்பதுதான் சரி.
இதுதான் இறுதியாயிற்று
கண்கள் இருள்கின்றன..
நஞ்சின் மாலை
கழுத்தில் தடவி
வாய் வரை எடுத்தாயிற்று
துப்பாக்கி ரவைகள் ..
கைகளில் ஒன்றும்
தலையில் ஒன்றுமாகப் பாய்கின்றன..

அது இரவின் நடுப்பகுதி.
இறந்துகொண்டிருக்கும் உடல்கள்
தூங்கிவிட்ட உயிர்கள்...
தூக்கக் கலக்கம் குப்பியைத் தவறியது
சப்பாத்து சத்தங்கள் விழவில்லை காதுக்குள்.
எப்படி வந்தார்கள்?இத்தனை வேகமாக?

'பிடிபடாதே' வார்த்தை வழுக்குகிறது
சுற்றிவளைத்தார்கள்...
முடிவை உணர வலித்தது
உயிர் போய்விடவேண்டும்..
எப்போதும் நினைக்காத
இறைவனிடம மன்றாடினேன்
உதிரம் தலையிலிருந்து ஒழுகுகிறது
கைகள் துண்டாகின...
மயக்கமடையவில்லை என் மனம்.
கண்கள் மூடி இருந்தாலும் காதுகள்
நடப்பதை மூளைக்குச் சொல்கின்றன.
வேட்டுச்சத்தங்கள் வெகுவாகக் குறைந்தன
தோற்றுப்போனதை மனம் நம்பியது
யார் யாரோ கத்தி அழும் கொடுமை.

காதுக்கு கேட்கிறது
இன்னும் கொஞ்ச நேரம்தான்...
உயிர் போய்விட்டால் எதுவும் தெரியாது...

அது போவதாக இல்லை !
மூளை மயக்கமடையாமல் விழித்திருந்தது.

என்னோடு பலரையும் ஒன்றாக
இழுத்து அடுக்குகிறார்கள்
உயிர் இருப்பதை உறுதிசெய்யவில்லை
ஆடைகளைக் களைகிறார்கள்
இறக்கப்போகும் உயிருக்கு
என்ன அவமானம் என்ன வலி?
வீரத்தை விளைத்து வீணாகிச்சாவதா?
கண்களைத் திறக்க முயல்கிறேன்
துப்பாக்கியின் நுனி குத்துகிறது
இத்தனை உடல் வலியிருந்தும்...ஏன்
சாவு அழைக்கவில்லை?
மூச்சு வெளியேற இப்படித் தடையா?

இடுப்பின் கீழே கொடூர வலி
வன்முறை என்பதை மூளை புரிந்தது
சுடு நெருப்பாய் மண்டைக்குள்
ஏதோ ஊருகிறது.
காதுகளில் கொடூர சத்தங்கள்
யாரோ ஓர் ஆண் மகன் அழுகிறான்
'பெண்களை அவமானப்படுத்தாதே!'
அவன் தலை சிதறுகிறது
சிரிப்பும் கலகலப்பும்
காதுகளை ரணப்படுத்துகின்றன.

இந்த நிலை வந்தெம்மைக் கொல்லுமென்று
நினைக்கவில்லையே
ராசாத்திகளாக இருந்தோம்...
ராணிகளாகச் சாக நினைத்தோம்
ஆடையில்கூட நாம் பிறர்
கவனம் கலைத்ததில்லை
வீரத்தைத்தான் வெளிப்படுத்தினோம்
மரணங்களும் ஏமாற்றங்களும்
எம்மை வழிமாற்றின..
அவமானப்பட்டு எங்கள் ஆயுள் முடியும்
காலம் ஒருபோதும் காட்டியதில்லை
வெற்றிபெறும் மண்ணில் வாழத்தான்
எம் கனவுகள் ...காத்திருந்தன.

பெண் பெற்றுவிடக்கூடாத துயரத்தை
வாழ்வின் முழுவதற்குமான துன்பத்தை
அந்த இறுதி நிமிடங்களில்
என்மீது இயற்கை கொட்டி முடித்தது.
இது நாமாக உருவாக்கியதில்லை...
காலம் எம்மீது நிர்ப்பந்தித்த போர்..
கட்டாயத்தின் பேரில்தானே
களமிறங்கினோம்...
வெற்றியை மட்டுமே சிந்தித்தோம்
தோல்வி எம் தலைவிதியை மாற்றியது.

போரின்போது வெற்றிபெற்றவன்
கோப நெருப்பை
வலிந்தவர் மீதுதான்
கொட்டிக் குதூக்கலிப்பான்.
காவியங்களில் படித்த நினைவுகள் ...
நிஜத்தில் நடக்கும் என்று...நாம்
நினைக்கவில்லை.....

அவர்களின் குதூகலம்..
கொஞ்சம் அடங்குகிறது
தொலைபேசி வெளிச்சத்தில்
புகைப்படங்கள் பதிகின்றன.

என் தாய் என் அலங்கோலத்தைப்
பார்க்க நேரிட்டால் ..
மரணித்துவிடுவாள்...
என் தந்தை உயிர்மாய்ப்பார்...
தம்பி தேம்பி அழுவான்..
தங்கை...போரிடத் துணிவாள்...
மீண்டும் இது ...தொடருமா?

இறந்தவை இழுப்பவை எல்லாம்
பதுங்க வெட்டிய மண்குழிக்குள்
புதைக்கப்படுகின்றன.
உடல் முழுவதும் கீறல்கள்
குருதி வடிந்த முகங்கள்
தாயைத்தேடும் விழிகள்.
பிளந்த வாய்களும்
திறந்த கண்களுமாய்..
கடைசி நேர மூச்சுக்கூட நிம்மதியற்று....
உடல் துவாரங்களை அடைக்கும்
மண் துகள்கள்....
இப்போதும்கூட
என் உயிர் பேசிக்கொள்கிறது..
யாரேனும் காப்பாற்ற வருவாரோ?

என்றோ ஒரு நாள் ..
தலைமுறைகள் தாண்டி...
இம்மண்ணில் நீங்கள்
புதையல் தோண்ட வரும்போது..
ஒரு கையில்லா கூட்டை கண்டுகொண்டால்
என் தாய்வழிச்சந்ததியிடம்
கொண்டுபோய்ச் சேருங்கள்!
என் அன்னையிடம் சொல்லுங்கள்
மீண்டும் பிறந்து அவள் மடியில்
விளையாடி இழந்த காலத்தை
அனுபவிக்க மறுபிறப்பாய்
நான் வருவேன் என்று!

ஆனந்தி



# காதலின் சாபம்

சொல்லாத அன்பால் சோகம்
கூடியது என்னுள்ளே
நில்லாத ஞாபகங்கள் நிலை
கொண்டது எனக்குள்ளே

மனமோ வாடியது அன்பை
அடைந்திட வழிதேடியது
நினைவுகள் கொள்வதினால்
நிமிடங்களும் சுமையாகியது

நிசப்த இரவில் எல்லாம்
நெஞ்சுருகி போகிறேன்
எட்டாத அன்பைக்கூட
எட்டித்தொட பார்க்கின்றேன்

என்னுள்ளே மிஞ்சுவது
எந்நாளும் சோகமே
இதுவே நான்பெற்ற
காதலின் சாபமே

ரா. துசேந்தன்
செல்வநகர், மன்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய தமிழ் இலக்கியங்களில் புத்தபெருமானின் போதனைகள்




பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
நிகழ்ச்சித்திட்டத் தலைவர்,
சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்,
முகாமைத்துவ அலகு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

திருக்குறள் பொதுமறை என்கின்றபோதும் அதில் சமண, பௌத்த தத்துவங்களின் செல்வாக்கு மிகையாகவே உள்ளது (சீனி வேங்கடசாமி, 1950). தம்மபதம் சொல்லுகின்ற அறம் சார் கருத்துகள் திருக்குறளில் அதிகமாகவுள்ளன என்று திருக்குறள் கூறும் உறுதிப்பொருள் என்ற நூலில் கூறுவர். தமிழில் எழுந்த ஐம்பெரும் காப்பியங்களில் மணிமேகலையில் உள்ள கௌதமரின் தத்துவக்கருத்துகள், சிலப்பதிகாரத்தில் உள்ள புத்தரின் தத்துவக்கருத்துக்கள், புறநானூறு சுட்டிக்காட்டும் வாழ்க்கை, நிலையாமை, அறம் போன்றவற்றில் கௌதமரின் சிந்தனையின் பிரதிபலிப்புகள் உள்ளமை இக்கட்டுரையில் அலசப்பட்டுள்ளது.

இந்து, பௌத்தம், சமணம் போன்ற சமயங்கள் எல்லாம் நல்வினை, தீவினை என்பவற்றில் நம்பிக்கை கொண்டவையாகவுள்ளன. இவ்வினைகளுக்கு அமைவாகவே உயிர்கள் மறுபிறப்பு எடுக்கின்றன என்பதில் பௌத்த மதத்துக்கு அதிகமான நம்பிக்கையுள்ளது. மணிமேகலையில் பீடிகை கண்டு பிறப்புணர்ந்த காதை, மந்திரங்கொடுத்த காதை என்கின்ற இரு காதைகளிலும் முற்பிறப்பில் இலக்குமியாக இருந்த பெண் இப்பிறப்பில் மணிமேகலையாகவும், இப்பிறப்பில் உதயகுமரனாக சித்தரிக்கப்பட்ட ஆண் முற்பிறப்பில் இலக்குமியின் கணவனாக வாழ்ந்த இராகுலன் முற்பிறப்பு பற்றி மணிமேகலை குறிப்பிடுவது மணிமேகலையில் காணப்படும் பௌத்த கருத்துக்களின் செறிவுக்கான ஓர் எடுத்தக்காட்டாக அமைகின்றது. ஞான உபதேசம் பெற்ற புத்தரது சிந்தனையில் நான்கு அடிப்படை உண்மைகள் பற்றிய தெளிவு பிறந்தது. அவைமுறையே துக்கம், துக்க உற்பத்தி, துக்க நிவாரணம், துக்கநிவாரண மார்க்கம் ஆகும். மணிமேகலை இக்கருத்தமைவை 30 பவத்திறம் அனுகெனப் பாவை தோற்ற காதையில்

*துன்பம் தோற்றம் பற்றே காரணம்*
*இன்பம் விடேபற்றிலி காரணம்*
*ஒன்றிய வுரையே வாய்மைதான் காவது*

*(மணி 30: 186-188)*

அசையும், அசையாப் பொருள்களின் மீது எற்படுகின்ற அதீதமான ஈடுபாடு அதாவது விம்பம்தான் துன்பத்துக்கான அடிப்படைக் காரணமாகவும், இன்பம் ஏற்படுவதற்கு பற்றற்ற தன்மையே அடிப்படைக் காரணமாகவும் உள்ளனவென மணிமேகலை வரிகள் கூறுகின்றன. தம்மபதம் துக்கம் பற்றியும், துக்க உற்பத்தி பற்றியும் பின்வருமாறு கூறுகின்றது.

தம்மபதம், ஈகையற்ற தன்மையும் இன்பவேட்கையும் வாழ வேண்டும் என்ற ஆசையும் அதிகாரம் செய்யும் ஆசையும் உலகவாழ்வில் துன்பத்திற்கான காரணங்களாக அமைகின்றன. துக்க உற்பத்திக் காரணமாக இருப்பது அவித்தை என்ற பேதமையே என்கிறது பௌத்தமும், தமிழ்நூல் வழி மணிமேகலையும்.

(முற்றும்)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org